பக்கங்கள் : 16+கல்விச்சுடர்

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 17 புதன்கிழமை (01.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :94

# கடற்றொழிலுக்கு உடனடி அனுமதி இல்லை படையினர் விலக்கல் சாத்தியம் இல்லை

## யாழ். படைகளின் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

✱ குடாநாட்டில் கடற்றொழிலை மேற்கொள்ள உடனடியாக அனுமதி வழங்கமுடியாது.

✱ வீதி ஓரங்களில் பணியில் உள்ள படையினரை உடனடியாக விலக்கும் சாத்தியம் இல்லை.

யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி இப்படித் தெரிவித்துள்ளார்.

யாழ். மனித உரிமைகள் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நேற்றுமாலை நடத்திய சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார் என சந்திப்புத் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

✱ வடமராட்சி மற்றும் வலி.மேற்குப் பிரதேசத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக கடற்றொழில் தடைசெய்யப்பட்டுள்ளதால், 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் எட்டப்பட்டுள்ள, போர்நிறுத்த உடன்பாட்டு அமுலாக்கத்தைக் கருத்திற் கொண்டு இந்தப் பிரதேசங்களில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

கடற்றொழிலுக்கு அனுமதிக்கும் சாத்தியம் இன்னும் உருவாகவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்றும் படைத்தளபதி தெரிவித்தார்.

✱ தும்பளை கிழக்கில் உள்ள (16ஆம் பக்கம் பார்க்க)

## துணைப்படை ஆயுதக் களைவு கூடாது

# ஜெனீவா உடன்பாடு அமுலானால் பாரிய பின் விளைவுகள் உருவாகும்!

## அரசை மிரட்டுகிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு,மார்ச் 1.

**துணைப்படையினரது - தமிழ் ஆயுதக் குழுவினரது - ஆயுதங்கள் ஒரு போதும் களையப் படக்கூடாது. அதனையும் மீறி அரசு ஜெனீவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த முயலுமானால் பாரிய பின்விளைவுகளை அது சந்திக்க வேண்டியிருக்கும்.**

**- இப்படி மிரட்டல் விடுத்துள்ளது ஜாதிக ஹெல உறுமய கட்சி.**

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் கடந்த 22,23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுகளின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை முற்றுமுழுதாக நிராகரித்திருக்கும் ஜாதிக ஹெல உறுமய, அது 'மஹிந்த சிந்தனை'க்கு மாறானது என்றும் காட்டமாக விமர்சித்துள்ளது.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள சாந்தி மன்றத்தில் அக்கட்சி நேற்று செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது. கட்சியின் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தேரர் தலைமை வகித்து கருத்துகளை வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

ஜெனீவாவில் புலிகளுடன் அரசு செய்து (16ஆம் பக்கம் பார்க்க)

## காலி துப்பாக்கிச் சூட்டில் கடற்படைச் சிப்பாய் பலி!

காலி,மார்ச் 1

காலி, ரத்கம பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் கடற்படைச் சிப்பாயொருவர் உயிரிழந்தார்.

காலி கடற்படை முகாமில் கடமையாற்றும் இந்தச் சிப்பாய் கடமைக்குச் செல்வதற்குத் தயாராகிக்கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மேற்படி சிப்பாய்மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு (16ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனீவாப் பேச்சை சீர்குலைக்க கருணாகுழு-படைத்தரப்பினர் சதி

## சரணடைந்த இளைஞர் தகவல்



படையினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுவும் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுகளைச் சீர்குலைக்க மேற்கொண்ட சதி முயற்சி தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஜெனீவாப் பேச்சுகள் நடைபெற்ற ஆரம்ப தினமான பெப்.22ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதன் மூலம் ஜெனீவாப் பேச்சுகளைக் குழப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் (16ஆம் பக்கம் பார்க்க)

# மாணவிகளைப் பீடித்தது வைரஸ் காய்ச்சல்தான்!

## மருத்துவ ஆய்வு அறிக்கை நேற்றுக் கிடைத்தது

யாழ்ப்பாணம்,மார்ச்.1

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளில் பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்படக் காரணமாக இருந்தது சாதாரண வைரஸ் காய்ச்சல் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இது சம்பந்தமாகக் கொழும்பில் நடத்தப்பட்ட ஆய்வுகள் இதனை உறுதிப்படுத்தியிருக்கின்றன.

பாதிக்கப்பட்ட மாணவிகளின் இரத்தம் மற்றும் தொண்டைச்சுரப்புகள் ஆய்வுகூடப் பரிசோதனைக்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்துக்கு அனுப்பட்டிருந்தன. அவை சம்பந்தமான ஆய்வு அறிக்கைகள் சுகாதார (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணையவந்த

# இருபது சிறார்கள் நேற்று பெற்றோரிடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி,மார்ச்1

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்ள முற்பட்ட வயது குறைந்த 20 சிறார்கள் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இவர்களைக் கையளிக்கும் நிகழ்வு முற்பகல் கிளிநொச்சியில் வடகிழக்கு மனித உரிமை அமைப்பு செயலகத்தில் இடம்பெற்றது.



மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரிகள் முன்னிலையில் இந்த 20 சிறார்களும் பெற்றோரிடம் அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஒப்படைத்தார். போலியான தகவல்களை வழங்கி விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முற்படும் சிறார்களை அடையாளம் கண்டு பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழீழ சமாதானச் செயலகம் முனைப்புடன் செயற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# பாணந்துறையில் இரண்டு சிறைக் கைதிகள் தப்பியோட்டம்

பாணந்துறை சிறைச்சாலையில் வழக்கு விசாரணைக்காக கொண்டுவரப்பட்ட இரண்டு கைதிகள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள்தப்பி சென்ற சமயம் சிறைப் பாதுகாவலர்கள் இவர்களை விரட்டிச் சென்று துப்பாக்கிப் பிரயோகம்மேற்கொண்ட போதும் இவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இவர்கள் இருவரும் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் பண்டாரவளைப் பகுதியில் ஒழிந்திருந்த சமயம் பண்டாரவளைப் பொலீஸாரால் கைது (16ஆம் பக்கம் பார்க்க)

## அவிசாவளையில் ஆயுதங்கள் பொலீஸாரால் நேற்று மீட்பு!

அவிசாவளை, மார்ச் 01

அவிசாவளை, அக்ராபுர பகுதியிலிருந்து ஒரு தொகை ஆயுதங்களை அவிசாவளைப் பொலீஸார் நேற்றுக் கைப்பற்றியிருக்கின்றனர்.

இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் நேற்று இந்த இடத்திற்குச் சென்ற பொலீஸார் ரி - 56 ரக துப்பாக்கிகள், இரண்டு மகசின்கள், 52 துப்பாக்கி ரவைகள் என்பவற்றைக் கைப் (16ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சுடர்

**இன்று: இரசாயனவியல் வினாத்தாள், இணைந்த கணிதம் விடைக் குறிப்புகள்.**

**நாளை: உயிரியல் II, பௌதிகவியல் வினாத்தாள்கள்.**

# இளவாலை மாணவர்கள் தாக்கப்பட்டமை அப்பட்டமான சிறுவர் உரிமை மீறும் செயல்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்.1

இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி மாணவர்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம், சர்வதேச சிறுவர் உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயல்.

- இவ்வாறு கண்டனம் தெரிவித்திருக்கிறது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். இச்சம்பவத்தைக் கண்டித்து மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 24.02.2006 அன்று இளவாலை சென்.ஹென்றீஸ் பாடசாலைச் சிறுவர்கள் நான்கு பேர் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது வன்னியர் கோயிலடி எனு மிடத்தில் அவர்களை வழிமறித்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மூவர் அவர்களைப் பற்றைகளை வெட்டுமாறு வற்புறுத்தியதுடன் அதை மறுத்த மாணவர்களை மிகவும் வன்மையாகத் தாக்கியுமுள்ளனர். இதனால், கடுமையான காயத்துக்குள்ளாகிய 13 வயதுடைய ஜேம்ஸ் நிரோஷன் எனும் மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இலங்கைத் தீவில் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் சுவிஸ் தலைநகரான ஜெனீவாவில் இடம்பெற்ற மறுநாளே இந்தச் சம்பவம் நடந்துள்ளமையானது மிகவும் வேதனையளிக்கின்றது. யாதுமே அறியாத இந்த அப்பாவி மாணவச் சிறுவர்கள் மீது இராணுவத்தினர் இவ்வாறு கண்மூடித்தனமாகச் சப்பாத்துக் கால்களாலும் கொட்டன்களாலும் தாக்கி யமையானது சர்வதேச சிறுவர் உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாகும். இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சிறுவர் உரிமைகள் தொடர்பாக கரிசனை காட்டும் சிறுவர் உரிமை அமைப்புகள் இது தொடர்பாக இன்றுவரை எந்தவித அக்கறையுமின்றி இருப்பது எமக்குக் கவலையளிக்கின்றது. உண்மையில் சிறுவர் மேல் அக்கறையிருக்குமாயிருந்தால் இது தொடர்பாகப் பூரண விசாரணைகளை நடத்தி சிறுவர் அமைப்புகள் உடன் சம்பந்தப்பட்ட இராணுவத்தினருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதுடன் இராணுவத்தினரின் இச் செயலினைச் சர்வதேச சிறுவர் மனித உரிமை அமைப்புகளின் முன் வெளிக்கொண்டுவர வேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதை விடுத்து சிறுவர் மேல் அக்கறை கொண்டவர்கள் போல் சிறுவர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் படையில் சேர்க்கிறார்கள் என்ற தவறான குற்றச்சாட்டுக்களை நிறுத்தி இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதனூடாகத்தான் உண்மையாகச் சிறுவர் உரிமைகளைப் பேண முடியும் என்பதனை அனைவரினதும் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். இராணுவத்தினரின் இச்செயற்பாடுகள் தொடர்பாக எதிர்ப்பினைக் காட்ட முற்பட்ட பாடசாலை மாணவர்களை ஆயுதமுனையில் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அச்சுறுத்திவருவதானது மீண்டும் குடாநாட்டின் மாணவர் சமூகத்தினை ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிராகச் செயற்பட வைக்கும் என்பதனைத் தெரியப்படுத்த விரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# பஸ்சேவை இரவு 8 மணிவரை நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

யாழ். பஸ் நிலையத்திலிருந்து கடைசி பஸ் இரவு 8 மணிக்குப் புறப்படும். இந்த நடைமுறை இன்று அமுலுக்கு வருகின்றது என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

குடாநாட்டில் அண்மைக் காலமாக நிலவிய அசாதாரண நிலை காரணமாக பஸ் நிலையத்திலிருந்து கடைசி பஸ் புறப்படும் நேரம் இரவு 7 மணியாகக் குறைக்கப்பட்டிருந்தது என்றும் - தற்போது அந்த நேரம் வழமை போல் 8 மணியாக நீடிக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (3-13)

# யாழ். நகரில் நேற்றுமாலை பெண்ணிடம் பணம் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

யாழ். நகரப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பெண் ஒருவரிடம் இருந்து 52ஆயிரம் ரூபா பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

தொல்புரம் மத்தி, சுழிபுரத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் தவநாயகி என்பவரிடம் இருந்தே பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாபப் பெண் இலங்கை வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக்கொண்டு பஸ் நிலையத்தை நோக்கி வந்தார் என்றும் - அவரைப் பின் தொடர்ந்து வந்த நபர் ஒருவர் அவரது பணப்பையைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டார் என்றும் -

அச்சமயம் மழை பெய்துகொண்டிருந்ததால், அப் பெண் அவலக்குரல் எழுப்பியும் எவரும் உதவிக்கு வரவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து யாழ். பொலீஸில் பிரஸ்தாப பெண் முறைப்பாடு செய்துள்ளார். (3-119)

### வேட்பு மனு நிராகரிப்புக்கு காரணம் யார்?

# உட்கட்சி விசாரணை அறிக்கையை வெளியிடுவதை ஒத்திவைத்தது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 1

கொழும்பு. மாநகர சபைக்கான தமது வேட்புமனு நிராகரிக்கப்படக் காரணமானவர்கள் யார்? எக்காரணத்திற்காக அது நிராகரிக்கப்பட்டது? என்பது தொடர்பில் உள்ளக விசாரணையொன்றை நடத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியினால் நியமிக்கப்பட்ட குழுவினது அறிக்கை உள்ளூராட்சி சபைத்தேர்தல் முடிவடைந்த பின்னரே வெளியிடப்படவுள்ளதாக கட்சியின் உயர் மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இந்த அறிக்கை முன்னதாக இன்று வெளியிடவிருந்தது. ஆனால், இந்த விவகாரம் தொடர்பில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது விமர்சனங்கள் எழுந்திருப்பதால் இந்த அறிக்கையை வெளியிடுவது எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்சிக்குத் தாக்கத்தை ஏற்படுத்தலாமென்றும் -

இதனடிப்படையில் விசாரணை அறிக்கையினை தேர்தலுக்குப் பின்னர் வெளியிடுமாறும் - கட்சித் தலைமைக்குப் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியதையடுத்து மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த விசாரணை அறிக்கையினை தேர்தலுக்கு முன்னரே வெளியிட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சாரார் கட்சித் தலைமையிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர் எனவும் மற்றுமொரு தகவல்தெரிவித்தது. (க-3)

## தட்டுவன் கொட்டியில் பாடசாலைக் கட்டடம் திறப்பு

கிளிநொச்சி,மார்ச் 1

ஆனையிறவு, தட்டுவன் கொட்டி மீள்குடியேற்றக் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாடசாலைக் கட்டடம், முன்பள்ளிக் கட்டடம் ஆகியவற்றின் திறப்பு விழா நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கட்டடங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனையிறவுச் சமரின் போது பாதிக்கப்பட்ட இக்கிராமத்துக்குத் தேவையான குடிதண்ணீர் வசதி, கல்வி வசதி போன்றவற்றையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (3-203)

## முகப்பு வளைவு திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

கைதடி, முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் பாடசாலை முகப்பு வளைவு திரைநீக்கமும் கணிதவள நிலையத்திறப்பு விழாவும் இன்று முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

வித்தியாலய அதிபர் பி.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (3)

## வலைப்பந்தாட்ட இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இறுதி ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

- சண்டிலிப்பாய் இந்து எதிர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

- சண்டிலிப்பாய் இந்து எதிர் இளவாலை கன்னியர்மடம்.

**19 வயதுப் பிரிவு**

- சண்டிலிப்பாய் இந்து எதிர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி. (த-190)

# போர்நிறுத்த உடன்படிக்கையில் ஜெனீவாவில் செய்யப்பட்ட திருத்தங்கள் எவை என அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்

## வலியுறுத்துகிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு,மார்ச் 1

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் ஜெனீவாவில் இடம்பெற்ற சமாதானப் பேச்சின்போது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டதாக அரசு கூறிவருகிறது. அவ்வாறு திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தால் அந்தத் திருத்தங்கள் என்ன என்பதை அரசு மக்களுக்குப் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் அப்போதுதான் அரசின் உண்மைத் தன்மையை மக்கள் உணர்வார்கள்.

அவ்வாறு வெளிப்படுத்தாத பட்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் நூறுவீதம் சரியானது என்பதையும் - அதில் பிழைகள் ஏதும் இல்லை என்றும் - வெறுமனே அரசியல் லாபம் கருதியே இவ்வொப்பந்தம் அரசால் குறைகூறப்பட்டது என்பதையும் மக்கள் விளங்கிக்கொள்வார்கள். அதற்கான வாய்ப்பை அரசே ஏற்பாடுசெய்து கொடுத்ததாகிவிடும்.

ஆகவே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் என்ன? அவை எந்த வகையில் நாட்டு மக்களுக்கும், நாட்டின் இறைமைக்கும் சாதகமானவையாக இருக்கின்றன என்பவை உள்ளிட்ட அவை சார்ந்த விடயங்களை அரசு உடனடியாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

- இவ்வாறு நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது -

விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து விடவேண்டும்; அது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் ஒப்பந்தமாகும் எனக் குறை கூறியவர்கள் இன்று ஜெனீவாவில் சென்று அதனை வலுப்படுத்தியுள்ளார்கள்.

இருப்பினும் ஒருபுறம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்தியுள்ளோம் எனத் தெரிவிக்கும் அரசின் அமைதிப் பேச்சுக்குழு, மறுபுறம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கிறது.

ஆகவே, யுத்தநிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட்டிருந்தால் எவ்வாறான திருத்தங்கள் அதில் மேற்கொள்ளப்பட்டன என்பதை அரசு நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக வெளிப்படுத்தவேண்டும். அவ்வாறு திருத்தப்படாவிட்டால் கட்டாயம் திருத்தியே ஆகுவோம் எனச் சவால் விட்டதன் பெறுபேறு என்ன? என்பதை அரசு தெரிவிக்கவேண்டும்.

உலக நாடுகளுக்கும் நாட்டு மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக ஒவ்வொரு விதத்தில் பதில் கூறுவதை உடனடியாக நிறுத்தி விட்டு நாம் கேட்கும் இக்கேள்விகளுக்கு மக்களை ஏமாற்றாத வகையில் உண்மையான பதிலைக் கூற வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை ஆதரிக்கும் கட்சியாகும். மக்களுக்குப் பொய் வாக்குறுதிகளை அது வழங்காது. அவர்களது நலனில் அக்கறை கொள்ளும் கட்சி எமது கட்சியாகும். அதனாலேயே நாங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் புலிகளுடன் செய்துகொண்டோம்.

தற்போதைய அரசு மக்களை ஏமாற்ற ஒருபோதும் எண்ணக்கூடாது. அமைதிப் பேச்சில் காலடி எடுத்துவைத்துவிட்டால் அதன் முடிவுப்பாதைவரை நாம் செல்லவேண்டும். இடையில் நிறுத்திவிடக்கூடாது.

ஐ.தே.க. எச்சந்தர்ப்பத்திலும் அமைதிப் பேச்சுக்கு ஆதரவளிக்கும் கட்சியாகும் - என்றார்.

**ஹேமகுமார நாணயக்கார**

இம்மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார கலந்து கொண்டு தெரிவித்ததாவது :-

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் பொலீஸ் மா அதிபர் உட்பட அமைச்சர்கள் மற்றும் அவர்களது மனைவிமாரும் ஜெனீவா சென்றார்கள். இவர்கள் மக்களின் நலனை முன்னிட்டு ஜெனீவா சென்றார்களோ அல்லது உல்லாசப் பயணமாகச் சென்றார்களோ தெரியவில்லை.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வேண்டும் என ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட ஜே.வி.பி. மற்றும் ஜாதிகஹெல உறுமயவினர் இன்று எவ்வித ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்ளாமல் அமைதியாக இருக்கின்றனர்.

இதனால், லிப்டன் சதுக்கமும், கோட்டை ரயில் நிலையமும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன - என்றார். (க-03)

## கொட்டன் அடியில் கொஸ்வத்தையில் ஒருவர் பலி!

நாத்தாண்டிய, மார்ச் 1

நாத்தாண்டிய, கொஸ்வத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இருவர் இடையே இடம்பெற்ற கைகலப்பில் கொட்டன் அடிக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

கொஸ்வத்த பகுதியிலுள்ள செங்கல் சூளை ஒன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த இருவரிடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பில் முடிந்ததில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக கொஸ்வத்த பொலீஸார் தெரிவித்தனர்.

பொல்லொன்றினால் தாக்கப்பட்டு உயிரிழந்தவர் டபிள்யூ. சந்திரரட்ண (வயது-42) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரைத் தாக்கிய சந்தேகநபரைக் கைது செய்துள்ள கொஸ்வத்தை பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். (க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

## மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சா...?

ஜெனீவாப் பேச்சு நடைபெற்று முடிந்தாலும் முடிந்தது, கொழும்பு அரசியலில் மிகக் குறிப்பாக, அரசாங்க வட்டாரங்களில் ஒரே குழப்பமும் கூச்சலுமாக இருக்கிறது. ஒவ்வொரு தரப்பும் தமது சொந்த அரசியல் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்திக் குழப்பிக் கலக்குகிறது.

நடைமுறைச் சாத்தியமானது என்ன, பேச்சில் இணங்கப்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்துக்கு உள்ள கடப்பாடு என்ன, தனக்குள்ள கண்ணியத்தை அது எவ்வாறு காக்கவேண்டும் என்ற முன்யோசனை எதுவுமே இன்றி, முரண்பாடான, அநேகமாக முட்டாள்த்தனமான கருத்துகள் அங்கு, கங்கு கணக்கின்றி, தங்குதடையின்றி! வெளியிடப்படுகின்றன.

நான்கு வருட காலமாக நடைமுறையில் உள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட விதிகள் - இணக்கப்பாடுகள் எவை - என்ற விவஸ்தையே இல்லாமல், வாயில் வந்ததை எல்லாம் யாரும் எப்படியும் கூறிக் குழப்பலாம் என்ற நிலை தெற்கில் தோற்றுவிக்கப்படுகிறது. இது ஆரோக்கியமான சூழ்நிலை ஆகாது.

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தத்தமது வாக்கு வங்கிகளைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், நாட்டின் பிரதான பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட ஜெனீவாப் பேச்சு முடிவுகள் குறித்து அங்கு நினைத்த நினைத்தவாறு கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன.

தத்தமது கருத்தை வெளியிடுவதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையைத் துஷ்பிரயோகம் செய்து, நாட்டு நலனை - மக்களின் நன்மையைக் - கருத்தில் கொள்ளாமல் கெடுதல் விளைவிக்கும் விதத்தில் செயற்படுவது ஒவ்வாத செயலும் பண்புமாகும்.

அரசியல் களம் என்றால் பொறுப்பற்ற விதத்தில் எதனையும் கூறலாம், செயலாக்க நினைக்கலாம், குழப்பிவிடலாம் என்ற போக்கிலேயே இத்தகைய கருத்து வெளிப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன.

ஒட்டுப்படைகளின் ஆயுதங்கள் களையப்பட்டால் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களையும் களைய வேண்டும் என்று அரசுக்கு ஜே.வி.பி. அழுத்தம் கொடுக்க இருப்பதாக வெளி வந்த தகவல் மேற்சொன்ன வகை சார்ந்தே.

2002 ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்தி, நாட்டின் அமைதி குழம்பிப் போகாமல் - கெட்டுவிடாமல் பார்த்துக்கொள்வதற்காகவே - அதற்கான இணக்கப்பாடுகளை உருவாக்குவதற்காகவே - ஜெனீவாவில் இரு தரப்புகளும் பேசின.

அந்தப் பேச்சுகளில் நாட்டில் அமைதியின்மை உண்டாவதற்கு முக்கிய காரணிகளாக உள்ள ஒட்டுப்படை களிடமிருந்து, ஆயுதங்களைக் களைவது குறித்தே பிரதானமாக ஆராயப்பட்டது. ஜெனீவாப் பேச்சுகளின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையின் வாசகங்கள் நேரிடையாக அதனை சொல்லாவிட்டாலும் உண்மையான கருத்து அதுவே.

நாட்டில் உடனடியாக அமைதியைக் கொண்டு வருவதற்கு மிக முக்கியமான தேவை துணைப்படைகளின் - ஒட்டுக் குழுக்களின் - ஆயுதக் களைவு.

மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புறாமல், அவர்கள் வன்செயல்களால் பாதிப்புறாமல், அவை குறித்த அச்சமில்லாமல் சகஜ வாழ்வை மேற்கொள்வதற்கு அமைதிப் புறச்சூழல் அத்தியாவசியமானது; கட்டாயமானது. அதனை உருவாக்குவதற்கான ஏற்பாடாகவே ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசு இணங்கி உள்ளது.

அதற்காக, விடுதலைப் புலிகளின் ஆயுதங்களையும் களையுமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பது என்பது மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமமான அந்தஸ்தில் நின்று - சம நிலையில் நின்று - சம பலத்துடன் நின்றுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அமைதிப் பேச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பலமே ஆயுதந்தான். ஆயுதப் போராட்டத்தில் வெற்றி கண்டதாலேயே அந்த இயக்கத்துடன் பேச வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு உருவாகியது.

அவ்வாறு இருக்க, விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற கருத்து, அமைதிப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நோக்கம் கொண்டதே. அமைதிப் பேச்சுகளை இல்லாமற் செய்வதற்கான சூது செய்தலாக அதனைக் கருதலாம்.

தமிழர் தரப்பில் ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கு முன்னர், சாத்வீக வழிப் போராட்டங்கள் மூலமான போராட்டங்களின் விளைவு என்ன என்பது இந்த நாட்டின் ஐம்பது ஆண்டுகாலச் சரித்திரம்!

அந்தச் சரித்திரத்தை, தமிழர்கள் ஏமாற்றப்பட்டதை, அவர்களது உரிமைகள் தூக்கிவீசப்பட்டதைச் சிங்கள அரசியல்வாதிகள் படிப்பதில்லையா?

தாம் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் என்பதால் எதையும், எப்படியும் கூறலாம் என்று எண்ணுவதா? அது தகாது.

அதேபோன்று, தமது போட்டி அரசியலுக்கு, ஒருவருக்கு மற்றவர் குழிபறிக்கும் அரசியல் "வேதாந்தத்துக்கு", தமிழர் விவகாரத்தைக் கையில் எடுக்கும் வழக்கத்தையும் தெற்கின் தலைவர்கள் நிறுத்திக் கொள்வதே நாட்டு நலனுக்கு நல்லது.

ஜெனீவாப் பேச்சுகளில் கூறப்பட்ட இணக்கப்பாடு நாட்டில் போர் இல்லாத ஒரு நிலையைத் தோற்றுவிப்பதற்கான ஆரம்பம் என்பதனை உணர்ந்து -

ஜனாதிபதி மஹிந்த அது நோக்கிய ஆக்கபூர்வமான வழியில் ஒற்றை அடியையேனும் முதலில் எடுத்துவைப்பதற்கு சிங்கள அரசியல் வாதிகள் இடங்கொடுப்பார்களா?

இல்லையேல், மக்கள் எதிர்பார்க்கும் போர் அற்ற சூழ்நிலை அரும்புவதே கேள்விக் குறியாகிவிடும். அதற்கு மேல் நடக்கக்கூடியதை இங்கே சொல்லவேண்டிய அவசியமில்லை.

# போலித்துப்பாக்கியைக் காட்டி மிரட்டியோர் பொதுமக்களிடம் வகையாக மாட்டினர்!

## சங்கானையில் சம்பவம்; பிடிபட்டோர் நையப்புடைப்பு

போலித்துப்பாக்கியைக் காட்டி பொதுமக்களை மிரட்ட முயற்சித்த இளைஞர் கோஷ்டி ஒன்றை மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 26ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று சங்கானைப் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

இரவு 10 மணியளவில் சங்கானை வல்லை வீதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு அருகில் அவ்வூர் இளைஞர்கள் சிலர் நின்று கொண்டிருந்தனர். அவ்வேளையில் இரண்டு மோட்டார் சைக்கிளில் அவ்விடத்துக்கு வந்த ஆறு பேர் இவர்களை நோக்கி வந்து ஒருவரின் நெஞ்சில் போலித் துப்பாக்கியை வைத்து மிரட்டியுள்ளனர்.

பின்னர் சங்கானை புளியடி என்னும் இடத்தில் வசிக்கின்ற, சங்கானையில் கடை வைத்திருக்கும் மூவரும் இதே பாணியில் மிரட்டப்பட்டுள்ளனர்.

முகத்தை மூடி துணியால் மறைப்புச் செய்திருந்த இவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட அங்குள்ளவர்கள் இவர்களைப் பிடிக்க முயற்சித்த போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் ஓடிவிட்டனர்.

மற்றைய சைக்கிள் பழுதடைந்து விட்டதால் ஊர் மக்களிடம் அவர்களில் மூவர் மாட்டிக்கொண்டனர். பின்னர் அவர்கள் மூலம் ஏனையவர்களும் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

இவர்கள் கோண்டா[illegible]பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று [illegible]ரணையில் தெரியவந்தது. பொதுமக்களால் எச்சரிக்கப்பட்ட பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனர். (த-21)

## கட்டாக்காலிகள் தொல்லை

தென்மராட்சி,மார்ச்1

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ, தச்சன்தோப்பு, நுணாவில் மேற்கு ஆகிய பகுதிகளில் நெற்பயிர்கள் கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்பட்டு வருவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வயல்களில் பெரும் தொகையில் வரும் மாடுகள் வெட்டிவைத்துள்ள நெற்பயிர்களையும் சூடு வைக்கப்பட்டுள்ள நெற்குவியல்களையும் நாசமாக்கி வருவதாகவும் தெரிவித்தனர்.

தென்மராட்சி தெற்கில் கட்டாக்காலிகளாக அலையும் மாடுகள் இரவில் பாதுகாப்பு வேலிகளையும் தாண்டி வந்து பயிர்களை நாசம் செய்வதாகவும் தெரிவித்தனர். (த-117)

## கலை இலக்கியப் போட்டிகளுக்கு ஆக்கங்களை அனுப்பக் கோரிக்கை

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் 2006ஆம் வருடத்தின் தேசிய இலக்கிய கலைப் பெருவிழாவின் பொருட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் நான்கு கட்டங்களாக கலை இலக்கியப்போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்காக கட்டுரை, கவிதை, கவிதை விமர்சனம், சிறுகதை,சிறுகதை விமர்சனம் ஆகிய போட்டிகளும் திறந்த இலக்கிய கலைப் போட்டியாளர்களுக்காக கவிதை, சிறுகதை, எழுந்தமானக் கவிதை ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபருடனும் திறந்த போட்டியாளர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்துடனும் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தினையும் போட்டி நிபந்தனைகளையும் பெற்று ஆக்கங்களை எதிர்வரும் 22 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (த)

### கண்ணி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றியபோது

## கடத்தப்பட்டோரின் பெற்றோரிடம் இரகசியப் பொலீஸ் குழு விசாரணை

யாழ்ப்பாணம்,மார்ச்1

பருத்தித்துறையில் கடத்தப்பட்ட டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பணியாளர்களின் பெற்றோரிடம் கொழும்பில் இருந்து வந்த இரகசியப் பொலீஸ் குழு விசாரணைகளை நடத்தியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி பருத்தித்துறையில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த டெனிஸ் நிறுவனத்தில் பணியாற்றும் நாராயணமூர்த்தி காண்டீபன், தம்பையா தர்மசிறி ஆகிய இருவர் வெள்ளைவானில் வந்தோரால் கடத்தப்பட்டிருந்தனர்.

கடத்தல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக கொழும்பில் இருந்து ஐந்துபேர் கொண்ட இரகசியப் பொலீஸ் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது என்றும் -

இவர்கள் கடந்த 23ஆம் திகதி பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்திற்கு கடத்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோரை அழைத்து அவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் மறுநாள், கடத்தப்பட்ட இடத்திற்குச் சென்ற பொலீஸார் அந்த இடங்களையும் பார்வையிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## பாலைதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்துக்கு செல்ல ஏற்பாடு

குருநகர்,மார்ச்1

பாலைதீவு யாத்திரைத் தல உற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறவுள்ளது.

பாலைதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்துக்குச் செல்லவுள்ள யாத்திரிகர்களை இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை குருநகர் இறங்குதுறை ஊடாக படகுகளில் அழைத்துச்செல்வதற்கான நடவடிக்கைகளை குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கம் மேற்கொண்டுள்ளதாக சங்கச் செயலாளர் பி.றெக்ஸ் தெரி வித்தார்.

இந்த உற்சவத்துக்குச் செல்லவுள்ளவர்கள் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கப் பணிமனையில் பிரயாணப் படிவங்களைப் பெற்று தமது விவரங்களைப் பதிவுசெய்துகொள்ள முடியும்.

எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னர் பிரயாணத்துக்கான பதிவுகள் எவையும் நடைபெறமாட்டா. பிரயாணப் பதிவுகள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறும் எனவும் கடற்பயணம் 15ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் செயலாளர் பி.றெக்ஸ் மேலும் தெரிவித்தார். (த-51-13)

### நாளை

மாசி 18
வியாழக்கிழமை
02.03.2006
திதி: திருதியை
பின்னிரவு 12.34 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முற்பகல் : 11.52
சுபநேரம் : 07.57 - 09.27
ராகுகாலம் :1.57 - 03.27
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

செயற்கை அழகு மணிக்கு மணி குறைந்துகொண்டேயிருக்கும்.

- ஓர் அறிஞர்.



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு / வாடகைக்கு

55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மேல்மாடி வீடு விற்பனைக்கு / வாடகைக்குண்டு. அத்துடன், அதே வீதியில் 5½ பரப்புக்காணி ஒன்றாகவும் பிரித்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (47298)

### காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்திக்கு அருகில் கோப்பாய் வீதியில் 4 பரப்பும் 2½ குழியுடைய காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கணேசு கமலேஸ்வரன்,,இணுவில் மேற்கு, இணுவில். T.P. 0777 730570. (47418)

### வீடுகள் விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு டிப்போவிற்கு அருகில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. கலைச்செல்வன், பளைறோட், இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். T.P. 0773053063 (47410)

### வீடு, தளபாடம் விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் வீடுவளவும், பாவித்த தளபாடங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777079746 , 021 222 2638 9.00 a.m & 5.00 p.m வரை. (சி/48015)

### இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48018)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.03.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும், உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி நல்லூர் பாம்செண்- 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48015)

### தவறிவிட்டது

இல.19, பொன்னம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடைய சத்திய சீலன் தயாபரா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 830090339V) விசேட அடையாள அட்டை (இல. 0902006150) அரியாலைக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும் T.P.077 6003063 (தகுந்த சன்மானம் வழங்கப்படும்.) (47416)

செருக்கப்புலம் -தெல்லிப்பழை என்ற முகவரியுடைய கனகநாயகம் அச்சுதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (830164669V), விசேட அடையாள அட்டை (இல.0907014609) என்பன அடங்கிய பேர்ஸ் சுன்னாகத்திற்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சஞ்யோ கூல்பார், சுன்னாகம். (47419)

### அபூர்வ ஜோதிடம்

கடும் அவஸ்தை தரும் நோய் குணமாதல் அதிஷ்ட பலன் அறிதல் சனி, ஞாயிறு 8.30-2.00 P.m. தொடர்பு: விதானையார் வளவு, உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (47412)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், உயரம் 5'4'', சிவில் பொறியியலாளர், 1976ஆம் ஆண்டு பிறந்த, உத்தரம், கன்னி லக்கினம் செவ்வாய் தோஷமற்ற பாவம் 33, தீய பழக்கங்கள் எதுவுமற்ற மணமகனிற்கு படித்த, அழகுள்ள சிவந்த மணமகள் தேவை. ஜாதகம், படம் சுயவிவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். தொடர்பு: விளம்பர இல.2816 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (47215)

### வீடு வாடகைக்குத் தேவை

காரியாலயம், களஞ்சியம் ஆகியவற்றுக்கேற்ற வீடு ஒன்று தேவைப்படுகின்றது. கீழ்க்காணும் எமது ஸ்தாபனத்துக்கு 500 m தூரத்தில் இருப்பது அவசியம். வாடகை, மற்றும் விவரங்களுடன் 2006.03.04ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ். கிளை, 73, கண்டி வீதி,**
(சி-48103) **யாழ்ப்பாணம்.** (21.11.19)

### ஆங்கில பாட பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் ஜி.சீ.ஈ சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்பினை பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடத்தவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பிற்கான கால்கோள் விழா இன்று கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் கழகத் தலைவர் லயன் அ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) செல்வி கி.வீரசிங்கம், ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.தேவராசா ஆகியோர் கலந்துகொள்வர். (த-117)

## கண்ணீர் அஞ்சலி

இமையாணன் மேற்கு, தூப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட



## கிருஷ்ணபிள்ளை சிறீமுருகன்

அவர்கள் 21.02.2006 அன்று சுவிஸில் இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது நிலையத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை மன்றாடி நிற்கின்றோம்.

உறுப்பினர்கள்,
**உதயசூரியன் சனசமூக நிலையம்.**

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

(47411)(21.19.11)

## 31 ஆம் நாள் நினைவாக...

அன்னை மடியில்
05 - 04 - 1926



ஆண்டவன் அடியில்
02 - 02 - 2006

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வதிவிடமாகவும் கொண்டிருந்து, தற்போது வைமன் வீதியில் வசித்தவருமாகிய

### திருமதி கந்தையா புவனேஸ்வரி

*பார் போற்ற எம்மை*
*சீராக வளர்த்தீர்கள்*
*கண்கள் நீர் சொரிய*
*எம்மைத் தவிக்கவிட்டு*
*எங்கே மறைந்தீர்கள்?*

(47414) (39.11.19.21)

எங்கள் இதய தெய்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் தொலைபேசி, தந்தி, தபால், பத்திரிகை வாயிலாகவும் நேரிலும் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.03.2006) வியாழக்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையிலும் 04.03.2006 சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு வீட்டுக்கிருத்தியமும் தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெறும். இவற்றில் கலந்து அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

*53/4,வைமன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

பூமியில்
04 - 07 - 1917



சொர்க்கத்தில்
12 - 03 - 2005

### அமரர் ஆண்டி ஆறுமுகம்

எங்கள் தோட்ட முற்றத்தில்
இறைவன் விதைத்த முத்தொன்று -
தன் அர்ப்பணிப்புக்கள் அனைத்தையும்
எமக்காகவே சுவாசித்தது
(ஐயா!) உங்கள் நினைவுகளை
உயிர் மூச்சாய் சுவாசித்த அனைவரும்
களிப்புடனே வாழ்த்தி நிற்பர்!

*இன்று (01.03.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.*

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

39,அரசடி வீதி,
5 ஆம் ஒழுங்கை, நல்லூர்.

[47421] [39.11.19.21]


## "எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்"

நிறுவனத்தின் ஊடாக

குடும்பமாக வெளிநாடுசென்றுவர அரியவாய்ப்பு!

- இருவழி விமானச்சீட்டு
- இரண்டு இரவுகள், 3 நாள்கள் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிட வசதி.
- ஹொட்டேல் விமான நிலையம் இருவழி போக்குவரத்து போன்றவை உள்ளடங்கலாக.

பாங்கொங்-26999/=
திருவனந்தம்- 27999/=
மெட்றாஸ் (சென்னை) - 31999/=

- கொழும்பு → கனடா → கொழும்பு 99,000+ TAX
- கொழும்பு →கனடா 55,000+ TAX
- கொழும்பு → லண்டன்→ கொழும்பு 48,000+ TAX
- கொழும்பு → லண்டன் / கொழும்பு →பரிஸ் / கொழும்பு → பிராங்பேட் } 38,000+ TAX

56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

TEL: 021 222 3771, 0777915824 E-mail aitkenspence jf @ sltnet. lk

உங்கள் நம்பிக்கையான பயண நிறுவனம்


## இந்து வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை

### பணிவன்பான வேண்டுகோள்

வட்டுக்கோட்டை, இந்து வாலிபர் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு ''பவளவிழா மலர்'' வெளியிடப்படவுள்ளதால் எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள், வரலாற்று நிகழ்வுகள், அது சம்பந்தமான புகைப்படங்கள் வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்புகொண்டு 25.05.2006இற்கு முன்னர் தந்துதவுமாறு விநயமாக வேண்டுகின்றோம். உங்கள் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

செயலாளர்,
**இந்து வாலிபர் சங்கம்,**
**வட்டுக்கோட்டை.**

(47417)(21.11.19)

# 2050 ஆம் ஆண்டுக்குள் இந்தியா சீன மக்கள் தொகையை மிஞ்சிவிடும்

வாஷிங்ரன்,மார்ச்1

உலகில் அதிகமக்கள் தொகை கொண்ட நாடு சீனா. இதற்கு அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது.

இந்நிலையில் 2050 ஆம் ஆண்டுக்குள் சீனாவின் மக்கள் தொகையை இந்தியா மிஞ்சிவிடும் என்று அமெரிக்காவின் மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை நடத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

உலக அரங்கில்

அதன்படி இந்தியாவின் மக்கள் தொகை 2050 இற்குள் 160 கோடியாகவும் சீனாவின் மக்கள் தொகை 140 கோடியாகவும் இருக்கும்.

ஜூன் 1, 1999 இல் உலக மக்கள் தொகை 600 கோடியாக இருந்தது.

தற்போது உலகின் மக்கள் தொகை 650 கோடி.. தற்போதைய விகிதாசாரப்படி மக்கள் தொகை பெருகுமானால் 2013 இற்குள் உலகின் மக்கள் தொகை 700 கோடியைத் தாண்டும். 2050 இற்குள் 920 கோடியை எட்டும்.

தற்போது ஒரு விநாடிக்கு 4.1 பேர் பிறக்கிறார்கள். விநாடிக்கு 1.8 பேர் இறக்கிறார்கள்.

ஜப்பானில் முதல்முதலாக கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் குறைந்துள்ளது.

2050 இற்குள் ஜப்பானின் மக்கள் தொகை 10 கோடிக்குள்தான் இருக்கும். (ஐ)

# கருணாநிதி மறுத்தார் ஜெயா கொடுத்தார்!

## கூட்டணி குறித்து தொல்.திருமாவளவன்



சென்னை,மார்ச் 1

விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு கருணாநிதி கொடுக்க மறுத்த அங்கீகாரத்தை ஜெயலலிதா கொடுத்துள்ளார் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார்.

தி.மு.க. எங்களை அங்கீகரிக்கவில்லை. அதனால் எங்களை அங்கீகரிக்கும் கட்சியுடன் கூட்டணி சேர்ந்துள்ளோம்.

மாற்று அணியை உருவாக்க ராமதாஸுக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால், இதுவரை எந்தப் பதிலும் இல்லை. இந்த நிலையில் அ.தி.மு.கவிலிருந்து அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்றுக் கூட்டணி சேர்ந்துள்ளோம். இக்கூட்டணியால் பா.ம.க.வுடனான நட்பு பாதிக்கப்படாது. ஆனாலும், தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியின் வெற்றிக்காகத்தான் முழு மூச்சாகப் பாடுபடுவோம். இதில் நட்புக் கட்சி என்று தயவு பார்க்க முடியாது. எதிரணியில் யார் போட்டியிட்டாலும் கடுமையாக எதிர்ப்போம் என்றார் திருமாவளவன். (ஐ)

# பறவைக் காய்ச்சல் வைரஸுக்கு கோடை காலம் முடிவு கட்டும்!

புதுடில்லி,மார்ச்.1

நெருங்கிவரும் கோடை காலம் பறவைக் காய்ச்சல் வைரஸுக்கு முடிவு கட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் மழைகாலத்தில் மீண்டும் இந்த வைரஸ் பரவாமல் தடுக்க, முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகவலைப் ,பறவைக் காய்ச்சல் பற்றிய ஆசிய - பசுபிக் ஆலோசனைக் குழுவின் (ஏ.பி.ஏ.சி.ஐ) 2 நாள் கூட்டம் முடிவடைந்த பின்னர் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் மருந்தியல் துறையைச் சேர்ந்த டாக்டர் ரந்தீப் குலேரியா கூறியுள்ளார்.

கோடை காலம் உச்சத்தை அடையும் போது பறவைக் காய்ச்சல் வைரஸுகள் அழிந்து விடும். ஆனால், புலம்பெயர்ந்து வரும் பறவைகள் மூலம் மழைகாலத்தில் இந்த வைரஸ் மீண்டும் பரவும் அபாயம் உள்ளது.

முதலில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவியதாகக் கூறப்பட்ட பறவைக் காய்ச்சல் வைரஸ் (எச்5என்1), தற்போது ரஷ்யா, கஜகிஸ்தான், பிரான்ஸ், துருக்கி மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளிலும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, தென்கிழக்கிலிருந்து மேற்குப் பகுதிக்கும் பினனர் தெற்கு வழியாக வடகிழக்கு இந்தியாவுக்கும் இந்த வைரஸ்பரவியிருக்க வேண்டும்.

தென்கிழக்கு ஆசியாவிலிருந்து இந்த வைரஸ் பரவியது என்றால் வடகிழக்கு இந்தியாவுக்கு முதலில் பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், அங்கு பரவியதாகத் தகவல் இல்லை என ரந்தீப் கூறியுள்ளார்.

கோழிகள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு வர்த்தக அடிப்படையில் கொண்டு செல்லப்பட்டதன் மூலமே பறவைக் காய்ச்சல் பரவியதாகக் கருதப்பட்டது. ஆனால், தற்போது வெளிநாட்டுப் பறவைகள் மூலம் பரவியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதை ஆய்வுகள் மூலமே உறுதிப்படுத்த முடியும் என 'ஏ.பி.ஏ.சி.ஐ' தலைவர் டாக்டர் ஜேன் ஜென்னிங்ஸ் கூறியுள்ளார். (ஐ)

# நைகர் நாட்டுக்கும் பறவைக் காய்ச்சல் பரவியது

லண்டன்,மார்ச்1

மேற்கு ஆபிரிக்க சகாரா பகுதியைச் சேர்ந்த நைகர் நாட்டுக்கும் பறவைக் காய்ச்சல் பரவியிருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளன.

ஆபிரிக்காவிலுள்ள நாடுகளில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ள மூன்றாவது நாடு நைகர் என்று கருதப்படுகின்றது.

உலகில் மிக வறிய நாடுகளில் ஒன்றான நைகர் நைஜீரியாவுடன் நீண்ட எல்லைப் பகுதியைக் கொண்டுள்ளது. நைஜீரியாவில் பறவைக் காய்ச்சலினால் ஏற்கனவே ஆயிரக்கணக்கான கோழிகள் அழிந்துள்ளன.

ஆபிரிக்காவில்இதுவரை மனிதர்களுக்கு எச்5என்1 தொற்று ஏற்பட்டதாக செய்தியில்லை என்றாலும் அவ்வாறான நிலைமை ஒன்று ஏற்படும் சாத்தியம் இல்லாமல் போகவில்லையென்று ஐ.நா. எச்சரித்துள்ளது.. (ப)

# உண்ணாவிரதத்தை கைவிட்டார் சதாம்



பக்தாத்,மார்ச்1

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டார்.

அமெரிக்காவின் தலையீட்டின்படி தனக்கு எதிராக நடைபெறும் நீதிவிசாரணை முறையாக நடைபெறவில்லை என்று எதிர்ப்புத் தெரிவித்து 11 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வந்தார் சதாம் ஹுசைன்.

இந்நிலையில் ஒரு வாரத்துக்கு முன்பே சதாம் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டு விட்டதாக அவரது பிரதம வழக்கறிஞர் கலீல் அல் துலைமி செய்தி நிறுவனம் ஒன்றிடம் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை சதாமை சந்தித்து 7 மணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். எங்களது வேண்டுகோளின்படி அவர் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டார் - என்று அவர் கூறினார். (ஐ)

# சேது சமுத்திரத் திட்ட அகழ்வுப் பணிக்கு மீண்டும் கேள்விப் பத்திரம் கோர முடிவு

சென்னை,மார்ச்1

சேது சமுத்திரத் திட்டத்தில் அகழ்வுப் பணிக்கு மீண்டும் கேள்வி கோரப்போவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் டி.ஆர். பாலு தெரிவித்தார்.

சென்னை கிண்டியில் சேது சமுத்திரத் திட்டத்துக்கான தலைமை அலுவலகத்தை திங்கட்கிழமை திறந்துவைத்து அவர் உரையாற்றினார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற ஒப்புக்கொண்ட 'ஹூன்டாய்' நிறுவனம் தற்போது கூடுதலாக சில சலுகைகளைக் கேட்டுள்ளது.

200 கோடி ரூபா வரை சுழற்சி நிதி உள்ளிட்ட கோரிக்கைகளை அந்நிறுவனம் வைத்ததால் அந்தக் கேள்வி கைவிடப்பட்டது. தற்போது புதிதாக கேள்வி கோர முடிவுசெய்யப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் கேள்வி இறுதி செய்யப்படும்.

சேது சமுத்திரத் திட்டத்தின்படி அடம்ஸ் பாலம் மற்றும் பாக்கு நீரிணை பகுதியில் ஏ,பி,சி,டி என் நான்கு கட்டங்களாக அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஏ,பி பகுதியில் அதாவது அடம்ஸ் பாலம் பகுதியில் 34 கி.மீ. தூரத்துக்கு கடல் ஆழப்படுத்தப்படும்.

இதேபோல பாக்கு நீரிணையில் சி,டி பகுதியில் சுமார் 54 கி.மீ. தூரத்துக்கு ஆழப்படுத்தப்படும். மொத்தமுள்ள 167 கி.மீ. திட்டத்தில் 88 கி.மீ. தூரமே ஆழப்படுத்தப்படுகிறது.




சென்னையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சேது சமுத்திரத் திட்ட அலுவலகத் திறப்பு விழாவில் இந்தியக் கப்பல் கழகம் சார்பில் ரூ.192.2 கோடி ஈவுத் தொகைக்கான காசோலையை மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலுவிடம் வழங்குகிறார் இந்திய கப்பல் கழகத்தின் மேலாண் இயக்குநர் எஸ்.ஹாஜரா(வலது)

இதில் 'டி' பிரிவில் தற்போது ஆழப்படுத்தும் பணியை இந்திய அகழ்வுக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது. 130 லட்சம் கன மீற்றர் அளவுக்கு ஆழப்படுத்தும் பணியில் இதுவரை 25 சதவீதத்தை அதாவது 34 லட்சம் கன மீற்றர் வரை ஆழப்படுத்தியுள்ளது. தேவைப்பட்டால் 'சி' பிரிவு அகழ்வுப் பணியும் இந்நிறுவனத்துக்கே ஒதுக்கப்படும். கேள்வி மூலம் இறுதி செய்யப்பட்டு பணிகள் ஒக்ரோபர் மாதம் தொடங்கும். இதனால், திட்டப் பணிகளில் எவ்வித தாமதமும் ஏற்படாது. 2008ஆம் ஆண்டு நவம்பருக்குள் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறும் - என்று அமைச்சர் கூறினார். (ஐ)

# அமெரிக்கப் பாடசாலையிலிருந்து பாடப் புத்தகங்கள் பறிமுதல்

## ஐக்கிய அரபு எமிரேட் நடவடிக்கை

அபுதாபியில் உள்ள அமெரிக்கப் பள்ளியில் இருந்து சமூகப் பாடங்களுக்கான 100 புத்தகங்களை ஐக்கிய அரபு எமிரேட் அரசு ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்தது.

இப்புத்தகங்களில் இஸ்லாம் மதத்தைக் குறித்தும் முஸ்லிம் நாடுகளைக் குறித்தும் எதிர்மறையாக எழுதப்பட்டிருந்ததாக அரசுத் தரப்பில் கூறப்படுகிறது.

இத்தகைய புத்தகங்கள் பிஞ்சு மனங்களில் நஞ்சைக் கலப்பதாக உள்ளது என்று அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

இத்தகைய புத்தகங்கள் பாடப்பிரிவில் இருந்து நீக்கப்படும். தனியார் பள்ளிகளின் பாடப் புத்தகங்கள் குறித்து அரசு விழிப்புடன் கண்காணிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'உலக கலாசாரம்' என்ற தலைப்பிலான அந்தப் புத்தகம் 6ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது.

முகமது நபி குறித்த கேலிச்சித்திரத்தை டென்மார்க் பத்திரிகை வெளியிட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் நாடுகள் இதுபோன்று பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. (ஐ)




# சிறைக் கிளர்ச்சியாளர்கள் அதிகாரிகளுடன் உடன்பாடு

லண்டன்,மார்ச்1

ஆப்கானிஸ்தானில் காபூலுக்கு அருகிலுள்ள பிரதான சிறைச்சாலையில் கைதிகள் நடத்திய கிளர்ச்சி ஒருவாறு முடிவுக்கு வந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன. சிறைச்சாலையில் மரணமானவர்களையும் காயமடைந்தவர்களையும் கையளிப்பதற்கு கிளர்ச்சியிலீடுபட்ட கைதிகள் சம்மதித்ததைத் தொடர்ந்து இந்த நிலைமை தோன்றியுள்ளது.

கிளர்ச்சி நடைபெற்ற புல்-இ.சார்கி சிறைச்சாலைக்கு உணவு மற்றும் தண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஆப்கான் அதிகாரிகள் கூறியுள்ளனர். இச்சிறையில் சுமார் ஆயிரத்து 300 கைதிகள் உள்ளனர். இவர்களில் தலிபான்களும் அடங்குவர்.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான சிறைச்சாலைக் கைதிகளின் கிளர்ச்சியைத் தொடர்ந்து சுமார் 4 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்துள்ளனர். முன்வந்த செய்திகள் 7 பேர் கொல்லப்பட்டதாகக் கூறியிருந்தன.

கிளர்ச்சியாளர்கள் தமது கோரிக்கைகளுடன் கூடிய பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளனர். சிறை நிலைமைகள் சீர்படுத்தப்படவேண்டும், உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்த சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற கோரிக்கைகளும் இதில் அடங்கும்.

இச்சிறைச்சாலையைச் சுற்றி ஆயுதப்படைகள் நிலைகொண்டிருக்கின்றன. என்றாலும் சில பகுதிகள் கிளர்ச்சியாளர்கள் வசமே உள்ளன.

கிளர்ச்சியாளர்களுடன் தொடர்பு கொண்ட அதிகாரிகள் அவர்களுடன் ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டுள்ளனர். காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அனுப்பவும் மரணமானவர்களை புதைக்க அனுப்பவும் அவர்கள் உடன்பட்டுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் கோரிக்கைகளை அரச மேலிடத்துக்கு அறிவிக்கவிருப்பதாகவும் அவர்கள் சுமுகமான முடிவு எடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சு நடத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

FedEx Express R அனுசரணையுடன்

திருமுருகன் கொம் நெற்றின்

காலாண்டு பரிசு மழை

எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் உறவுகளுக்குத் துரித கதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O.பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் காலாண்டுக்கு ஒருமுறை குலுக்கலின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=

லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=

ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்


## பட்டதாரி ஆசிரியருக்கு துரித பயிற்சித் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்1

தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான துரித பயிற்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி கல்வி அமைச்சின் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே இப்பயிற்சி தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள ஆசிரியர்களின் விவரங்களை அனுப்புமாறு சகல வலயக் கல்வி அலுவலகங்களிடமும் கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளது. (202-204)

## இரத்ததானம்

தென்மராட்சி,மார்ச்1

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் குருதிக் கொடை வழங்கினர்.

கடந்த வியாழனன்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்குச் சமூகம் தந்த யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியினர் குருதியை சேகரித்தனர்.

இரு கல்லூரிகளிலிருந்து 60 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், மாணவர்களும் குருதிக் கொடை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## கிறிஸ்தவபாடக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்1

வை.எம்.சி.ஏக்களின் பிராந்திய சபை வடக்கு அமைப்பு ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான இலவச கிறிஸ்தவ பாடக் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள் ளது.

இக் கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (த-202)

## நூலகம் மீண்டும் இயங்குகின்றது

வடமராட்சி,மார்ச்1

பருத்தித்துறை நகர பொது நூல் நிலையம் சுமார் ஒரு மாத கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

பொது நூல் நிலையத்தில் பணியாற்றிய பணியாளர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டதையடுத்து நூலகத்தின் திறப்பு பருத்தித்துறை நகர சபைக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

பருத்தித்துறை பொலீஸாரினால் நூலகத் திறப்பு பருத்தித்துறை, நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொது நூலகம் மீண்டும் திறக்கப்பட்டு வாசகர்களுக்கான சேவைகளை வழங்கி வருகிறது. (க-173)

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

வடமராட்சி,மார்ச்.1

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபைப் பகுதிக்குள் நடமாடும் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டு வருகின்றன.

நெல்லியடிப் பட்டினப் பகுதிக்குள் அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையில் 27 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.(த-173)


## EXPRESS NET CAFE

இதோ யாழ்.மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
முற்றிலும் இலவசமாக

கணனி மயமாகிக் கொண்டிருக்கும் இவ் உலகின் கணனி தொடர்பாடல் முறையினைப்பற்றி அறிந்து கொண்டிருக்கிறீர்களா?

இல்லை எனில், இனிக் கவலையை விடுங்கள். முற்றிலும் இலவசமாக அறிந்துகொண்டு இணைய உலகத்திற்கு காலடி எடுத்து வையுங்கள்.

ஆம் இணையத்தின் வழியே....

- Internet Browsing
- E-mail
- Chating
- Voice Chating
- Video Chating

சிறுவர்களோ! பெரியவர்களோ! கணனி அறிவு உள்ளவர்களோ! இல்லாதவர்களோ! யார் வேண்டுமானாலும் இதனை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் பணத்தையும் நேரத்தையும் மீதப்படுத்துவதற்கும் யாழ்.மக்களாகிய நாம் தொழில்நுட்ப அறிவில் முன்னேறுவதற்கும் இன்றே விரைந்திடுவீர்.

அத்துடன்,

அனைத்து வகையான புதிய Came CD க்களையும் Soft wares, MP3 Video Songs CD க்களையும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாடுகளுக்கான Internet அழைப்புகளையும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

EXPRESS NET CAFE
328,STANLY ROAD, JAFFNA. T.P 222 7866
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்).

(47405)
(21.15.34)



## உங்கள் வாழ்வுக்குப் பிரகாசமான எதிர்காலம்

எங்கள் காப்புறுதி நிழலில் எங்களுடன் நீங்களும் ஒருவராய் இணைந்து கொள்ளுங்கள்.

### காப்புறுதி ஆலோசகர் பதவி வெற்றிடங்கள்

முடிவில்லாத வருமானத்தோடு, சமூகத்துக்கும் சேவை செய்து, உங்கள் வியாபாரத்தையும் முன்னேற்றிக்கொள்ள கனவு கண்டீர்களா?

**தகைமைகள்**

★ க.பொ.த (சாதாரணம்) இல் தமிழ்/சிங்களம், ஆங்கிலப் பாடத்துடன், கணித பாடம் அடங்கலாக ஆறு பாடங்கள் சித்தி.

★ (உண்மை பேசி) தனக்கே உள்ள விசேட திறமையால் நிறுவனத்தின் வியாபார நடவடிக்கையை அபிவிருத்தி செய்தல்.

**பயிற்சிகள்**

★ தொழில் சார் பயிற்சிகளும் கையேடுகளும் வழங்கப்படுவதுடன், எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகளுக்கூடாக மேலதிக பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

★ 2002 இல.43, காப்புறுதித் துறையை அபிவிருத்தி செய்யும் சட்டத்திற்கு அமைய, நடத்தப்படும் பரீட்சைகள் எடுப்பதற்கான ஆலோசனைகளும் பயிற்சிகளும் வழங்கப்படும்.

**கடமைகள்**

★ எமது யாழ்.பிராந்திய அபிவிருத்தி நிலையத்தின் கீழ் காப்புறுதி தேவைப்படுவோருக்கு அவர்களுடைய நிதித் தேவைகளுக்கேற்ப ஒவ்வொரு தனி நபருக்கும் சிறந்த ஆயுள் காப்புறுதியை வழங்கல்.

★ மக்களின் சொத்துக்களுக்கான காப்புறுதியை வழங்கல். (வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் கூட்டுக் காப்புறுதி)

★ சிறந்த நம்பிக்கைக்குரிய சேவையை மக்களுக்கு வழங்கி, நிறுவனத்திற்கும் மக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தல்.

**நன்மைகள்**

★ நீங்கள் சேகரிக்கும் கட்டுப்பணத்தில் தரகு அடிப்படையில் உங்கள் வருமானம் அமையும்.

★ ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்.

★ உங்களுக்கான சுயதொழில் ஒன்றை வளர்த்தல்.

★ சரியான காப்புறுதி சேவையை வழங்கி, சமூகத்திற்கு சேவை செய்யும் அந்தஸ்து.

★ உங்கள் திறமைக்கேற்ப நீங்கள் வியாபார அபிவிருத்தி அலுவலராகும் வாய்ப்பு.

உங்கள் விண்ணப்பங்களைப் பூரண சுயவிவரக்கோவையுடன் சுயமான கையெழுத்தில் தயாரித்து, 7 நாள்களுக்குள் கீழ்காணும் விலாசத்திற்குப் பதிவுத்தபாலில் அனுப்பவும்.

(விண்ணப்பிக்கும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவி தொடர்பான விவரத்தைக் குறிப்பிடவும்).

**Manager,**
**HNB Assurance,**
**62-64 Stanly Road,**
**Jaffna.**
**T.P.: 021 222 6016**

(47340)
(21.15.34.32)

HNB ASSURANCE


## 31 ஆம் நாள் நினைவு

மலர்வு 11 - 06 - 1943



உதிர்வு 30 - 01 - 2006

அமரர் **மயிலன் இராசரத்தினம்**

(கிட்டிணன்)

திதி: பிரதமை 01.03.2006

பாசத்தைப் பொழிந்தீரே! பண்புடனே வளர்த்தீரே!
நேசமுடன் பிறரையும் நினைத்தே வாழ்ந்தீரே!
வாசமுள்ள மலராய் வினாடிதனில் இறையடியை
பேசாமல் சென்றதேனோ? பாசமுள்ள அப்பாவே!

நாவலடி,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்.

(47325)(21.15.34)

## 9ஆவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு 14 - 02 - 1936



உதிர்வு 23 - 02 - 1997

## அமரர் முத்து நடராஜா

அன்போடும் பண்போடும்
எமை வளர்த்து ஆளாக்கிய
எம் பாசவிளக்கே!
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
அப்பா உம் நினைவு
எமை விட்டு அகலாது.

உமது ஆத்மா சாந்தியடையப்
- பிரார்த்திக்கும்.

கமலாதேவி (மனைவி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

விநாயகர் பாடசாலை அருகில்),
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(47401)(21.34.15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் 7ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

பிறப்பு 25 - 06 - 1925



இறப்பு 30 - 01 - 2006

அமரர்
**வியாகேசு மங்கையர்க்கரசி**

திதி: 01.03.2006

பிறப்பு 19 - 01 - 1948



இறப்பு 01 - 02 - 1999

அமரர்
**வியாகேசு யோகராசா**

(வானம்பாடி வில்லிசைக் குழு நாயகன், வானம்பாடி யோகராஜ்)

ஆருயிரே எம் அன்புத் தெய்வங்களே!
பாச அரவணைப்புகளே பண்பின் உறைவிடமே
ஆறாது எங்கள் மனம் மாறாது உங்கள் நினைவுகள்
எத்தனை ஆண்டு சென்றாலும் என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை வேண்டுகின்றோம்.

வானம்பாடி தினேஷ்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(47300)(21.15.34)

-குடும்பத்தினர்.

## சந்தைக்கொட்டகை போதாது; இதனால் வியாபாரிகள் சிரமம்!

விசுவமடு றெட்பானாச் சந்தியில் அமைந்துள்ள பொதுச்சந்தைக்கான தற்காலிகக் கொட்டகைகள் போதாமையால் வியாபாரம் செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

றெட்பானாச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த பொதுச்சந்தைக்கான தற்காலிக கொட்டகைகள் தீப்பற்றி எரிந்து நாசமாகின.

இதன் பின்னர் புதிதாக கொட்டகைகள் அமைக்கப்பட்டு மரக்கறி வியாபாரத்திற்கென வழங்கப்பட்டுள்ளன.

மீன் விற்பனை செய்வதற்குக் கொட்டகைகள் எவையும் அமைக்கப்படவில்லை. தற்போது மீன் விற்பனையில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் வீதியோரத்தில் உள்ள புளிய மரத்தின் கீழ் வைத்தே வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். (த-307)

## தமிழீழக் கட்டுமான பொறியியல் செயலகம் திறப்பு

பரந்தன், மார்ச்1

தமிழீழக் கட்டுமான பொறியியல் செயலகம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கனகபுரத்தில் நிறுவப்பட்டுள்ள இச்செயலகத்தின் திறப்புவிழா கடந்த 18ஆம் திகதி பொறியியல் செயலகப் பொறுப்பாளர் துளசி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரைத் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பிரியன் மற்றும் துறைசார்ந்தோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல்துறைத் துணைப்பொறுப்பாளர் மாதவன் ஏற்றினார்.

செயலகப் பெயர்ப்பலகையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலக செயலாளர் நீதன் திரைநீக்கம் செய்துவைத்தார். செயலகக் கட்டடத்தை நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகியோர் நாடாவெட்டித் திறந்து வைத்தனர். (த-352-202)

## புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் காப்புறுதிப் படிவங்களை அனுப்புக!

### துணுக்காய் கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச்1

துணுக்காய் கல்வி வலயத்தில் கடந்த வருடம் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது காப்புறுதி (அக்ஹாரா) விண்ணப்பப் படிவத்தையும் வங்கிக் கணக்கு இலக்கத்தையும் வலய அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் கேட்டுள்ளார்.

மேற்படி ஆசிரியர்களின் காப்புறுதிக் கொடுப்பனவுகள் ஏற்கனவே கழிக்கப்பட்டுள்ளன. ஆயினும், படிவங்கள் கிடைக்காமையால் உரிய இடங்களுக்கு கணக்கை சரி செய்வதில் இடர்பாடுகள் உள்ளன என்றும் -

படிவங்களை அனுப்பிவைக்காதவர்களின் இம்மாதத்திற்கான கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்படலாம் என்றும் - வலயத் திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார். (த-88-202)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## கோதுமை மாவின் பயன்பாடு அதிகம்; இதனால் நெல்லுக்கு கிராக்கி குறைவு

### முல்லைத்தீவு அரச அதிபரிடம் சுட்டிக்காட்டு

பரந்தன், மார்ச்1

முல்லைத்தீவு மாவட்டத்தில் கோதுமை மாவின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் நெல் சந்தைப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் உற்பத்தியான அரிசி மாவைப் பயன்படுத்துவதில் மாவட்ட மக்கள் அசிரத்தை காட்டுவதோடு, கோதுமை மாவின் பயன்பாட்டை அதிகரித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை உள்ளூரில் சந்தைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது என சாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கோதுமை மாவின் இற[illegible] யை மாவட்டத்தில் கணிசமாகக் குறைத்துக்கொண்டால் உள்ளூர் உற்பத்திக்கு சந்தை வாய்ப்பு ஏற்படும் என விவசாயிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த 17ஆம் திகதி முல்லைத்தீவு செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக்குழுக் கூட்டத்தில் அரச அதிபரின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு வரப்பட்டது. (த-352-202)

## பற்சிகிச்சையும் கருத்தூட்டலும்

புதுக்குடியிருப்பு, மார்ச்1

பற்சுகாதார மாதத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் கருத்தூட்டல் நிகழ்வுகளும் பற்சிகிச்சை வழங்குதலும் நடைபெற்று வருகின்றன.

கடந்த 22ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா கலையரங்கில் கருத்தூட்டல் செயலமர்வு நடைபெற்றது.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் க.அருள் ஆசிரியர், சுகாதார சேவையினர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தமிழீழ சுகாதார சேவைகளின் பற்சுகாதார சேவைப் பிரிவினர் பல்வேறு இடங்களிலும் பற்சிகிச்சைகளை நடத்தினர்.

பாலிநகர் மகாவித்தியாலயத்தில் 150 பேருக்கும் அம்பாள்புரம் பாடசாலையில் 101 பேருக்கும் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் 150 பேருக்கும் பற்சிகிச்சை வழங்கப்பட்டது.

கைவேலி கணேசா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலை, ஒற்றைப்பனையடி சுனாமி இடைத்தங்கல் முகாம், முள்ளிவாய்க்கால் பாடசாலை ஆகிய இடங்களில் பற்சிகிச்சையும் -

கைவேலி கணேசா வித்தியாலயம், வேணாவில் பாடசாலை, கோம்பாவில் பாடசாலை, சிவநகர் பாடசாலை, முள்ளிவாய்க்கால் பாடசாலை ஆகிய இடங்களில் கருத்தூட்டல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கற்சிலைமடு தியாகதீபம் மருத்துவமனையினரால் ஒட்டுசுட்டான், சின்னச்சாளம்பன் ஆகிய இடங்களிலும் கருத்தூட்டல் நிகழ்வுகள் நடத்தப்பட்டதுடன் பற்சிகிச்சையும் வழங்கப்பட்டன. (த-353-202-341)

## மன்னாரில் 3 தினங்கள் சிறப்புற நடந்த கேணல் கிட்டுவின் ஓவியக் கண்காட்சி

தமிழீழ நுண்கலைக் கல்லூரியினால் ஒழுங்குசெய்யப்பட்ட முத்த தளபதி கேணல் கிட்டு வரைந்த ஓவியங்களின் கண்காட்சி மன்னார் மாவட்டத்தில் மூன்று நாள்களாக நடைபெற்றன. முதல் நாள் கண்காட்சி இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர், இராமச்சந்திரன் கண்காட்சி மண்டபத்தை முற்பகல் 10 மணிக்கு திறந்துவைத்தார். பிற்பகல் 5 மணிவரை இடம்பெற்ற கண்காட்சியில் பெருமளவான மாணவர்கள் பங்குபற்றினர். 2ஆம் நாள் நிகழ்வு தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் மன்னார் வளாகத்தில் நடைபெற்றது. மடு வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரன் மண்டப நாடாவை வெட்டி கண்காட்சி மண்டபத்தைத் திறந்துவைத்தார்.

3ஆம் நாள் நிகழ்வுகள் பெரியபண்டிவிரிச்சான் ம.வியில் நடைபெற்றன. பாடசாலையின் பிரதி அதிபர் ஜெயசீலன் நாடாவைவெட்டி கண்காட்சி மண்டபத்தைத் திறந்து வைத்தார். மூன்றுநாள் நிகழ்வுகளுக்கும் மன்னார் மாவட்ட நுண்கலைக் கல்லூரிப் பொறுப்பாளர் பத்மநாதன் தலைமை வகித்தார். (த)

## முல்லைத்தீவு பாடசாலை மாணவர்களுக்கு விஞ்ஞான வினாவிடை, கட்டுரைப் போட்டி

புதுக்குடியிருப்பு, மார்ச்1

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தினால் வினாவிடை, கட்டுரை ஆகிய போட்டிகள் முல்லைத்தீவில் நடத்தப்பட்டன.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கடந்த 22ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் போட்டிகள் நடைபெற்றன.

கல்லூரி முதல்வர் சி.சுப்பிரமணிஜேஸ்வரன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் கலாநிதி க.இரகுநாதன், விரிவுரையாளர் எஸ்.அருந்தாகரன் ஆகியோர் போட்டியை நடத்தினார்.

இப்போட்டிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, முல்லைத்தீவு மகாவித்தியாலயம், குமுளமுனை மகாவித்தியாலயம், பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறான போட்டிகள் நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். (த-353)

## பற்சுகாதார மாதத்தை முன்னிட்டு மாணவரிடையே கட்டுரைப் போட்டி

பரந்தன், மார்ச்1

பற்சுகாதார மாதத்தை முன்னிட்டு தமிழீழ சுகாதார சேவையினர் தமிழீழத்தின் சகல பாடசாலை மாணவர்களிடையே 'பற்சுகாதாரம்' என்னும் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தவுள்ளனர்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 300 சொற்களுக்கு மேற்படாதவாறு கட்டுரையைத் தயாரித்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் 'பொறுப்பாளர், நடமாடும் பற்சுகாதாரப் பிரிவு, தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம், கிளிநொச்சி' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பற்சுகாதாரக் கட்டுரைப் போட்டி' என்று குறிப்பிடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-352-202)

## வவுனியா வடக்கு, புதூர் கிராமத்தில் யானைகளால் மக்களுக்குத் தொல்லை

கிளிநொச்சி, மார்ச்1

வவுனியா வடக்கு, புதூர் கிராமத்தில் வாழ்ந்துவரும் மக்களுக்கு அண்மை நாள்களாக காட்டுயானைகளால் தொல்லை அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் வரும் யானைகள் மக்களுக்குத் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தி வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் காட்டு யானை ஒன்று அப்பகுதிக் கிணறு ஒன்றுக்குள் வீழ்ந்து பின்னர் பலத்த சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டமை தெரிந்ததே. தொடர்ந்தும் அங்கு யானைகள் உலாவுகின்றன.

இதேவேளை, காட்டுயானைகளின் தொல்லை காரணமாகப் பாதிக்கப்படும் மக்கள் தம்முடன் தொடர்புகொண்டால் தாம் அவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுப்பர் என்று வவுனியா மாவட்ட வன ஜீவராசிகள் அதிகாரி தெரிவித்துள்ளார்.

நெடுங்கேணிப் பிரதேசத்தில் யானையின் தாக்கம் காரணமாக தனது காலை இழந்த ஒருவருக்கு 25ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுக் காசோலை அப்பிரதேச கிராம சேவையாளர் ஊடாக வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-307)

## பாம்புக் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு

கிளிநொச்சி, மார்ச்1

வன்னியில் பாம்புக் கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்தினர் தெரிவித்துள்ளனர். தற்போது நெல் அறுவடை நடைபெற்று வருவதால் வயல்களில் அநேகர் பாம்புக் கடிக்கு இலக்காகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, அரிவுவெட்டுவோர் பாம்புகளின் தீண்டுதலை எதிர்பார்த்துச் செயற்படவேண்டும் என்றும் -

பாம்பு தீண்டும் சந்தர்ப்பத்தில் உரியவரை உடனடியாக அருகில் உள்ள ஆங்கில வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்றும் - சுகாதார சேவையினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

தவறான நம்பிக்கைகள், அநாவசிய தாமதங்களால் வீணான உயிரிழப்பை சந்திக்க நேரிடும். எனவே, இவ்விடயத்தில் அனைவரும் கவனமெடுத்துச் செயற்படவேண்டும் என்றும் - சுகாதார சேவையினர் மேலும் தெரிவித்தனர். (த-203)

## குழந்தைகளுக்கான 'அமுதம்' கணக்கு வைத்திருப்போருக்கு சிறப்புப் பரிசில்கள்

### தமிழீழ வைப்பகம் வழங்குகிறது

பரந்தன், மார்ச் 1

தமிழீழப் பகுதியெங்கும் தமிழீழ வைப்பகத்தினரால் குழந்தைகளுக்கான 'அமுதம்' சிறப்புத் தேட்டக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

'அமுதம்' சிறப்புத் தேட்டம் 2005ஆம் ஆண்டிற்கான தேசிய மட்டத்திலான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி கிளிநொச்சி தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் நடைபெற்றது.

தமிழீழ வைப்ப கநடுவப் பணியக மேலாளர் தலைமையில் நடைபெற்ற இச்சீட்டிழுப்பில் புதுக்குடியிருப்பு தமிழீழ வைப்பகக் கிளையைச் சேர்ந்த தா.டிலைக்சனா தெரிவானார்.

இந்த அமுதம் தேட்டக் கணக்கில் 10 ஆயிரம் ரூபா முதல் 25 ஆயிரம் ரூபா வரை வைப்புச் செய்யப்பட்டிருந்தால் 400 ரூபா பெறுமதியான பரிசில்களும் -

25 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபாவரை வைப்புச் செய்திருந்தால் 800 ரூபா பெறுமதியான பரிசில்களும் -

50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரை வைப்புச் செய்திருந்தால் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பரிசில்களும் -

ஒரு லட்சத்து ஒன்றுக்கு மேலான தேட்டத்திற்கு 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசில்களுடன் ஒரு வீத மேலதிக வட்டியும் வழங்கப்படுகிறது.

அத்துடன், அவர்கள் தேசிய மட்டத்தில் நடைபெறும் குலுக்கல் முறைக்கும் இணைத்துக்கொள்ளப்படும் தேசிய மட்டத்தில் நடைபெறும் குலுக்கல்கள் மூலம் தெரிவானோருக்கு மேலதிக பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (த-352-203)


## கணனிப் பயிற்சிக் கட்டடம் திறப்பு

புதுக்குடியிருப்பு, மார்ச்1

முல்லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரியில் கணனிப் பயிற்சி நெறிக்கான கட்டடம் ஒன்று கடந்த 23ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. கணனிப் பயிற்சிக் கட்டடத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ம.ரங்கன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனச் செயலாளர், கல்லூரி முதல்வர் க.வைரமுத்து ஆகியோர் கருத்துரை வழங்கினர். வவுனியா அரசசார்பற்ற நிறுவனத்தினர் 9 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள்ளனர். (த-353-203)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
19.10.1978

உதிர்வு
16.01.2006

## அமரர் நமசிவாயம் முரளிதரன்

நாட்கடப்போ நாற்பத்தைந்து
எம் நினைப்பில் உன்வனப்பே!
கண்ணிய நினைப்பின்
புண்ணிய புருஷன் நீ
அழகியல் உணர்வினில்
பரவிய பயிர் நீ
மின்சார வேலையில்
விஞ்ஞான விந்தையில்
சிந்தாடும் செம்மல் நீ–உன்
அன்பான பார்வையும்
பண்பான போர்வையும்
வீண் என்று போச்சோ?
ஏன் என்று போச்சோ?
சோதரரின் மணம் முடிக்க
சாரதியாய் நின்ற உனை
பாதி வழி வந்து நின்று
காலன் உயிர் கொய்தவனோ?
காண்பதற்கு ஏது செய்வோம்?
காண்பது நீ சொர்க்கமலோ!

சுத்தமனச் சுந்தரனே
சித்திரமே செந்தமிழே
சொந்தமனச் சோர்வினிலே
சேர்ந்தது நீ சொர்க்கமலே
அன்னை தம்பி அமெரிக்காவில்
தந்தையொடுஅண்ணன் கூடி
சொந்த மண்ணில் வந்தபோது
அண்ணனவன் மணமுடிப்பினிலே
திண்ணமென நின்றவனே
என்ன வினைத்தொடர் அதுவோ
உன்னையுயிர் துறந்ததுவோ?
சாது மகனே சாந்தவதனா
கணனியொடு படப்பிடிப்பு
கைவந்த கலையுனக்கே
சிலைவடிப்பில் சித்திரத்தில்
தேறிய நீ சூரியனே!
உதவு குணமும் உண்மை மனமும்
பருவ வயதில் பறிந்ததிங்கே
முத்தே முரளீதரா
படர்வது நீ பரனடியே....

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.03.2006) புதன் கிழமை காலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் கிழக்கு, அல்வாய். -குடும்பத்தினர்.

(47324)(52)

# பேச்சுடன் தொடர்பற்ற விடயங்களை முன்னுரையாக வாசித்தது அரச குழு!

**சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்ற 'விடுதலையின் வாசலில்' எழுச்சி நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையின் முதற் பகுதி நேற்றைய 'உதயனில்' வெளியானது. இரண்டாவது பகுதி இன்று பிரசுரமாகிறது.**

## 'விடுதலையின் வாசலில்' நிகழ்வில் தமிழ்ச்செல்வன் விளக்கவுரை

### சுனாமிப் பேரதிர்வு

உலகப் பந்திலே பேரதிர்வு நடந்தது. தென்கிழக்காசிய நாடுகள் குலுங்கின. எங்கள் தாயகத்தின் கடலோரக் கிராமங்கள் அனைத்துமே சின்னாபின்னமாகி அழிந்தன. பல்லாயிரக் கணக்கான எங்கள் உறவுகள் உயிரிழந்தார்கள். எங்கள் கட்டுமானங்கள் சிதைந்தன. யுத்த சிதைவிலிருந்து மெல்லமெல்ல மீண்டு, நாங்கள் எழுப்பிய கட்டுமானங்கள் அனைத்துமே ஒரு சில விநாடிகளில் சிதைந்தன.

இந்தப் போராட்டத்தின் தாங்கு சக்தியாக நின்ற எங்கள் தேசத்தின் கடற்கரையோரக் கிராம மக்கள் எல்லோரும் பெருந்துயருக்குள் தள்ளப்பட்டனர். அந்த மக்களின் மறுவாழ்வுப் பணிகளில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டிய தேவை எங்கள் விடுதலை அமைப்புக்கு ஏற்பட்டது.

எங்களுடைய முதன்மையான பணி அல்லற்படுகிற மக்களுக்கு ஆறுதல் தருகிற பணிகள்தான் என்று தீர்மானித்த தலைவர், விடுதலை அமைப்பின் சகல கட்டுமானங்களையும் அதில் செயற்படவைத்தார். அந்த நேரத்தில் எங்கள் புலம்பெயர் தமிழர்கள் தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதிகண்டு கதறி, கலங்கித் துடித்து பெருமளவு உதவிக்கு ஓடோடி வந்தார்கள். அதுதான் எம் மக்களுக்கு ஆறுதலாக இருந்தது.

அந்த நேரத்தில் உலகமும் பாரிய உதவிக்கு முன்வந்தது.

இலங்கைத் தீவில் தமிழர் தாயகப் பிரதேசம்தான் 75 வீதமான பாதிப்புகளடைந்திருக்கிறது. ஆகவே, எங்களால் தரப்படுகிற இந்த உதவிகள் சரியாகப் பகிரப்பட வேண்டும் - சிங்கள அரசியல்வாதிகள் சுருட்டிக்கொள்ளக்கூடாது என்று சர்வதேச சமூகம் கூறியது.

இரு தரப்பினரும் உங்கள் பிரச்சினைகளைத் தள்ளிவைத்துவிட்டு மனிதாபிமான விடயத்தில் ஒருங்கிணைந்து செயற்படமாட்டீர்களா? என்று கேள்வி எழுப்பினார்கள். அதை உடனே எங்கள் தலைவர் கருத்தில் எடுத்து எந்தத் தாமதமுமின்றி இணக்கம் தெரிவித்தார். சர்வதேச சமூகம் மகிழ்ச்சியடைந்தது. இருதரப்பும் மாறிமாறி ஏழெட்டுமுறை வரைவுகளைக் கொடுத்தோம். இறுதியாக நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத பல விடயங்கள் இருந்தாலும் மனிதாபிமான பணிகளுக்காக சர்வதேச சமூகம் வரைந்து கொடுத்த அந்தக் கட்டமைப்பைத் திருத்தமும் இன்றி ஏற்றோம்.

ஏனெனில், அது தற்காலிகமான சிறிய கட்டமைப்புத்தான். அரசியல் நிலைப்பாடுகளைப் பாதிக்காது என்றது சர்வதேச சமூகம். அதையும் நாங்கள் உடனே ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டுக் கொடுத்தோம்.

அது கொடுக்கப்பட்டு 4 மாதங்களுக்கு மேல் இழுத்தடித்த பின்னர் - சர்வதேச சமூகத்தினது எச்சரிக்கைக்குப் பின்னர் - சந்திரிகா அம்மையார் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். சிங்களவர்களுக்கு அது பொறுக்கவில்லை. இறுதியில் நீதிமன்றத்தில் முடக்கி வைத்தார்கள். இதன் மூலம் சிங்களப் பேரினவாதிகளின் மனிதாபிமானமற்ற, கொடூரமான - குரூரமான போக்கை உலகம் புரிந்துகொண்டது.

இப்படியாக எம் மக்களின் சிறுசிறு பிரச்சினைகளுக்குக் கூட விட்டுக்கொடுக்காத சிங்கள அரசாங்கங்கள் அமைதி முயற்சிகள் என்ற பெயரில் தீர்வின்றி பேச்சுகளை நடத்தி, மக்களின் வாழ்வு நிலையைச் சிதைப்பதும் விடுதலை அமைப்பைப் பலவீனப்படுத்துவதும்தான் அவர்களது உத்தி.

### தலைவரின் உரை

ஆகையால்தான், சென்ற ஆண்டு மாவீரர் நாள் உரையில் தலைவர் அவர்கள் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

அரசியல் வெறுமைக்குள் இனியும் இருக்கமுடியாது. பொறுமையின் எல்லைக்குள் வந்துவிட்டோம். 18 ஆயிரம் போராளிகளும் 80 ஆயிரம் மக்களும் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, எங்களது மக்களின் சுதந்திரத்தை உறுதிசெய்ய வேண்டும் என்பது எங்கள் நிலைப்பாடாக இருந்தது. இதையேதான் தலைவர் அவர்கள் மாவீரர் நாள் உரையில் தெரிவித்திருந்தார்.

### தமிழர்களின் அபிலாஷைகளை நிராகரித்தார் ராஜபக்ஷ

ஸ்ரீலங்காவில் ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ எடுத்த எடுப்பிலேயே தமிழ் மக்களின் அனைத்து அபிலாஷைகளையும் நிராகரித்தார். அவரிடம் ஒன்றுமில்லைத்தான். என்றாலும் அவருக்குக் கால அவகாசம் கொடுக்கவேண்டும் என்கிற சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கமைய எங்கள் தலைவரும் நிலைப்பாடு எடுத்தார். ஆனால், அந்தக் காலஅவகாசப் பகுதியில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

தமிழீழத்தில் பாரிய வெகுஜனப் போராட்டமாக மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். அதனால் பொறுமை இழந்த சிங்களப் படைகள், ஆயுதக் குழுக்களின் துணையோடு மக்கள் மீது வன்முறைகளை ஏவிவிட்டார்கள். அதனால் மக்கள் பொறுமையிழந்தார்கள். மக்களே திரும்பி இராணுவத்துடன் மோதுகிற சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இராணுவம் அச்சமும் பதற்றமும் அடைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தம் தொடங்காமலே தமிழ்மக்களைச் சீண்டியதால் பெருமளவு இராணுவ வீரர்கள் கொல்லப்படுகிற நிலைமை ஏற்பட்டது. தமிழ் மக்களின் கோபாவேசத்தால் இராணுவத்துக்கு இத்தனை பயங்கர விளைவுகளைக் கொடுத்திருக்கிறது எனில், யுத்தம் தொடங்கினால் என்ன நடக்கும் என்பது அவர்களுக்கு விளங்கியது.

யுத்தத்தை இப்போது தொடங்கினால் தமது படைகள் பின்வாங்க நேரிடும் அல்லது இல்லாது போய்விடும் என்ற பீதி மஹிந்த ராஜபக்ஷவின் மனதில் ஏற்பட்டது. அத்துடன், சர்வதேச உதவிகள் இல்லாமல் தமது அரசை நிலைக்க வைக்கமுடியாது என்கிற பிரச்சினையும் அவருக்கு இருக்கிறது. இந்த நிலையில்தான் சர்வதேச சமூகம் இறுதிக்கட்ட முயற்சியாக இரு தரப்பையும் சந்தித்து வேண்டுகோள் விடுத்தது.

அந்தக் கட்டத்தில்தான் தலைவர் சொன்னார், நாங்கள் வன்முறைகளை - போரை விரும்பியவர்கள் அல்லர். ஆனால், எங்கள் மக்கள் மீது கொடூரத்தை - வன்முறையைத் திணிக்கும்போது நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது; நாங்கள் அப்படியிருந்தாலும் மக்கள் அப்படியிருக்கமாட்டார்கள். ஆகவே, எங்களுக்கு விரைந்து தீர்வுவேண்டும். ஸ்ரீலங்கா அரசாங்கம் நினைப்பது போல் அவர்களது தந்திரங்களுக்குள் நாங்கள் இழுபட்டுப்போகமுடியாது. ஆகவே, மக்கள் மீதான வன்முறைகளை நிறுத்தினால்தான் அமைதி முயற்சிகளைப் பற்றிச் சிந்திக்கலாம் என்றார்.

''யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அமுலாக்கம் செய்யவேண்டும்'' என்ற இறுக்கமான உறுதியான நிலைப்பாட்டை தலைவர் முன்வைத்தார்.

இரு தரப்பு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் ஏற்றுக்கொண்டு இரு தரப்பு நிர்வாங்களை ஏற்றுக்கொண்டு - இராணுவ பிரசன்னங்கள் நிறுத்தப்பட்டு, மக்களின் வாழ்க்கையில் இயல்வு வாழ்க்கையை உருவாக்குகின்ற பல அம்சங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆகவே, அதனை நடைமுறைப்படுத்தினால்தான் அமைதி முயற்சி பற்றிச் சிந்திக்கலாம்.

இதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை இணக்கம் காணச்செய்தால்தான் பேச்சுக்கு வருவோம் என்று இறுக்கமாகக் கூறிவிட்டார்.

தேர்தலின்போது சிங்களத் தீவிரவாதிகளைத் திருப்திப்படுத்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது - நோர்வே அனுசரணை ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது என்று பல நிபந்தனைகளைப் போட்டு பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு இதனால் சிக்கல் ஏற்பட்டது. இருப்பினும் தமிழர்களுக்கு நாம் ஒன்றும் கொடுக்கப்போவதில்லைதானே- இருந்தாலும் சர்வதேச சமூகத்தினது உதவிகளுக்காகப் பேச்சுகளுக்குத் தயார் என்று சொல்லிவிட்டார்.

''யுத்தநிறுத்த அமுலாக்கம்'' தொடர்பாக ஜெனீவாவில் பேச்சுகள் நடைபெறும் என்று நோர்வே அறிவித்தது. இதனால் மஹிந்தவுக்கு நெருக்குதல். சிங்களத் தீவிரவாதிகளுக்குக் கொதிப்பு.

இதனால், சிங்களத் தீவிரவாதிகளைத் தனித் தனியே கூப்பிட்டு, ''நான் ஒன்றும் தமிழர்களுக்குத் தரமாட்டேன். பேச்சுவார்த்தைக்குத்தான் போகிறோம். நாம் அனுப்புகிற ஆள்களையும் பாருங்கள். எதையும் தந்துவிடமாட்டார்கள்.'' என்று கூறி சமாளித்து ஓர் அணியை இங்கு அனுப்பினார்.

### பேச்சு அணியில் கடும்போக்குவாதிகள்

இங்கே பேச்சுவார்த்தைக்கு வந்த சிங்களக் குழுவினருக்கு இடையே யார் பிரதிநிதி என்று பேச்சு மேசையில் சண்டை போடுகிறார்கள். பாலசிங்கம் அண்ணைக்கு முகமெல்லாம் இறுகிப்போனது.

கடற்படைத் தளபதியைக் கொண்டு போய் பின்னால் அமர வைத்துவிட்டு பேச்சு மேசையின் முன்வரிசையில் ஒருவரை உட்கார வைத்தார்கள். இது யாரப்பா? என்று பாலா அண்ணை கேள்வி எழுப்பினார்.

அவர் ஒரு பிரபல்யமான வழக்கறிஞர் என்றார்கள். அவர் பெயரைத் தெரிவித்ததும்தான் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதம் என்று கடுமையாக விமர்சித்தவர் என்று தெரியவந்தது. மிகக் கடும்போக்குவாதி.

''பேச்சுவார்த்தைக்குக் குழுவை எப்படி அனுப்புவது என்கிற பண்பு உங்களுக்குத் தெரியாதா? எங்கள் தலைவர் பேச்சுக்குத் தயார் என்றவுடன் எங்கள் குழுவின் தலைவர் யார்? பேச்சுவார்தைக் குழுவில் இடம் பெறுகிறவர்கள் யார்? என்று நாங்கள் அறிவித்தோம். ஆனால், இத்தனை பேரை அழைத்துக்கொண்டு வந்தா பேச்சுகள் நடத்துவது?'' என்று பாலா அண்ணை கேள்வி எழுப்பினார்.

ஒரு முன்னுரையாக பாலா அண்ணை பேச முற்பட்டபோது அதற்கும் விடமாட்டேன் என்றார்கள். பிரச்சினைக்குரிய ஆள்கள் நாங்கள். ஆகையால், எங்கள் தலைவர் தெரிவித்திருந்த விடயத்தை உள்ளடக்கி முன்னுரையாக பாலா அண்ணை பேசினார்.

பாலா அண்ணை பேசி முடித்த பின்னர் பேச்சுவார்த்தைக்கு எந்தத் தொடர்பும் இல்லாத விடயங்களைக் கொண்ட ஒரு முன்னுரையை வாசித்தார்கள்.

### 4 விடயங்களை முன்வைத்தோம்

அதன் பின்னர் நாங்கள் 4 விடயங்களை முன்வைத்தோம்

✱ வடக்கு - கிழக்கிலிருந்து ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும்.

✱ எங்களின் குடியிருப்புகள், வாழ்விடங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் விலகி மக்களை மீளக் குடியமரச் செய்ய வேண்டும்.

✱ எங்களின் மக்களில் 30 வீதமான மக்கள் கடல் வளத்தை நம்பியிருக்கிறார்கள். ஆகையால் கடற்றொழில் செய்ய விதிக்கப்பட்டிருக்கிற தடைகள் அகற்றப்படவேண்டும்.

✱ தமிழீழப் பகுதிகள் முழுமைக்கும் எங்கள் போராளிகள் அரசியல் பணிகள் மேற்கொள்ளும் வகையில் ஆயுதக் குழுக்கள் வெளியேற்றப்பட வேண்டும்.

- என்று யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய விடயங்களை நாம் முன்வைத்தோம்.

அதன் பின்னர் ஸ்ரீலங்காவின் காவல்துறைமா அதிபர் பெரிய கட்டை எடுத்து வைத்தார். எங்கள் தமிழீழத்தின் காவல்துறைமா அதிபர் நடேசன் அண்ணையும் அழைத்துச் சென்றிருக்கிறோம். ஸ்ரீலங்கா காவல்துறைமா அதிபர் முன்வைத்த கட்டில் என்னதான் இருக்கிறது என்பதை அறிய எங்களுக்கு ஆசை.

அப்போது ஸ்ரீலங்காக் குழுவின் வழக்கறிஞர் பேசிக் கொண்டிருந்தார்.

பாலா அண்ணையோ, ''யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதமா இல்லையா என்பது பற்றியா இங்கே பேச வந்தோம்? யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பில்தான் பேச வந்திருக்கிறோம். முதலில் இங்கு எதற்கு வந்தோம் என்பதைத் தெளிவாக்கிக் கொள்ளுங்கள். பேச்சுவார்த்தை மேசையின் கதிரையில் உட்கார்ந்திருக்கிறீர்கள். எதற்கான இந்தப் பேச்சுவார்த்தைக்கு இணங்கினீர்கள் என்பதைப் புரிந்துகொண்டு கதையுங்கள்'' என்று கூறினார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதம் எனில், கதிரையில் நோர்வேத் தரப்பும் இருக்க முடியாது என்பதால் அவர்களுக்கும் சிக்கலாகிவிட்டது'. அதனால், ''இது யுத்தநிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுவார்த்தைதான்'' என்று இறுக்கமாகக் கூறினார்.

### சிறுவர் பிரச்சினை பற்றி பேச வந்த அம்மா

உடனே சிறுவர்களை ஆயுதமயப்படுத்துகிற பிரச்சினையைப் பற்றிப் பேசவேண்டும் என்கிறார்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் சிறுவர் பற்றி எதுவும் இல்லையே. அதனால் இந்தப் பேச்சுவார்த்தையில் அதைப் பற்றிப் பேசவேண்டியதில்லை என்று கூறினோம்.



இருந்தாலும் அவர்கள் தொடங்கினார்கள். ஸ்ரீலங்கா குழுவில் முஸ்லிம் பிரதிநிதியாக பேரியல் அஷ்ரப் என்கிற ஓர் அம்மா வந்திருந்தார். அந்த அம்மா சிறார்களைப் பற்றிக் கதைக்கப் போகிறார் என்றார்கள். நான் ஓர் 'அம்மா' ஸ்தானத்திலிருந்து கதைக்கிறேன் என்று அந்த அம்மையார் தொடங்கினார். முஸ்லிம் பிரச்சினையைப் பற்றிப் பேச வந்த இந்த அம்மா , சிறுவர் பிரச்சினையைப் பற்றிப் பேசவேண்டிய நிலைமைக்கு 'ரிமோட்டை' இயக்கிவிட்டனர்.

சரி என்று நாங்களும் கதைக்கத் தொடங்கினோம். சிறுவர்களின் இந்த நிலைமை யாரால் ஏற்பட்டது? அவர்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட யார் காரணம்- என்று நாங்களும் கேள்வி எழுப்பினோம்.

80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்று எத்தனை பிள்ளைகளை அநாதரவாக்கி இருக்கிறீர்கள். எத்தனை பிள்ளைகளை எங்களுடைய பிள்ளைகளாக வளர்த்து வாழ்வளித்துக்கொண்டிருக்கிறோம் என்று வந்து பாருங்கள். சிறப்பு ஒழுங்குசெய்து தருகிறோம் என்று கூறினோம்.

நவாலி தேவாலயம் மீதும் நாகர்கோயில் பாடசாலைகள் மீதும் உங்கள் இராணுவமும் அரசாங்கமும் குண்டு வீசும்போது இப்போதைய உருவாக்கம் எங்கேயப்பா போனது என்று கேள்வி எழுப்பினோம். சிறார் விடயத்தைக் கதைக்க அருகதையற்றவர்கள் நீங்கள் என்று சுட்டிக்காட்டினோம். பின்னர் அதைவிட்டுவிட்டார்கள்.

### காவல்துறைமா அதிபருக்கு பாலா அண்ணையின் பதிலடி

நாங்கள் அடுத்து ஆயுதக் குழுக்களைப் பற்றிக் கூறினோம். அடுத்ததாக காவல்துறைமா அதிபர் அந்தப் பாரிய கட்டைத் திறந்து பேசத் தொடங்கினார்.

துரையப்பாவை கொலை செய்தீர்கள்... அவரைக் கொலை செய்தீர்கள், இவரைக் கொலை செய்தீர்கள் என்று தொடர்ந்து வாசித்துக்கொண்டே போனார்.

அடுத்து பாலா அண்ணை தொடங்கினார்.

''இங்க என்னத்துக்கு வந்திருக்கிறியள்? பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறியள். இலங்கைத் தீவில் இரண்டு தேசங்களுக்கு இடையில் போராட்டம் நடக்கிறது. அங்க கொலை இல்லாமல் ஆள்களை ஆள்கள் தூக்கிக் கொஞ்சுவதா நடக்கப்போகுது?

துரையப்பாவை யார் சுட்டது? ஏன் சுட்டது என்று என் புத்தகத்தில் எழுதியிருக்கிறேகேனப்பா. துரையப்பாவை கொன்றது... உங்கள் 40 ஆயிரம் இராணுவத்தைக் கொன்றது.. எதையும் இல்லை என்று நாங்கள் சொல்லலையே.. அங்கு போர் நடந்தது என்பதை மறந்துபோய் இங்கு கதைக்கிறியளே.. என்ன கதை இது? காவல்நிலையமா இது?'' என்று கேட்ட பின்னர்தான் அவர்களுக்குப் புரிந்தது தாங்கள் வேறு இடத்திற்கு வந்திருக்கிறோம் என்று.

ஜெனீவாப் பேச்சு மேசையை நீதிமன்றம் என்று நினைத்துக்கொண்டு காவல்துறைமா அதிபர் வந்துவிட்டார்.

சிங்கள அரசாங்கம் தேர்வு செய்த குழுவினரைப் பார்த்தால் அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அனுப்பவில்லை என்றுதான் தெரியும்.

### கூட்டறிக்கையில் இழுபறி

பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் இரு தரப்பும் கூட்டறிக்கை எழுதவேண்டும். ஆனால் அங்கு பிரச்சினை வந்துவிட்டது. ஏனெனில் ஸ்ரீலங்கா அரசாங்கக் குழுவினர் பேச்சுவார்த்தை தொடக்கத்தில் வாசித்த முன்னுரையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது என்று சொல்லப்பட்டிருந்தது.

(வளரும்)

## கலந்துரையாடல்

வடமராட்சி,மார்ச் 1

வடமராட்சி உள வளத்துணையாளர், நட்புதவியாளர்களுக்காக விசேட கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் நடைபெறும்.

(த-173)

## நாடகப் பிரதி வழங்கும் வைபவம்

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் இன்று மாலை 5 மணிக்கு திருமறைக் கலாமன்றக் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்கும் பிரமாண்டமான ஆற்றுகையான இதில் இணைந்து நடிக்க விரும்பும் ஆண் - பெண் இரு பாலாரையும் பிரதி வழங்கும் வைபவத்திற்கு வருகை தருமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருப்பாடுகளின் நாடகம் இம்முறை 'பலிக்களம்' என்ற பெயரில் எதிர்வரும் ஏப் ரல் மாதம் 6 ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

## தீர்வை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

எட்னா கனகேஸ்வரி பாலச்சந்திரன்
இல.251, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல.D/611

எதிர்

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன்
"எவ்லின்"
காங்கேசன்துறை வீதி, இணுவில்,யாழ்ப்பாணம்.

எதிராளி

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு மாசி மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசா அவர்கள் ஆஜராக இருக்கவும், எதிராளி சமுகமில்லாதிருக்கவும், எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது,

இவ்வழக்கில் இன்று அழைப்புக்கட்டளை சேவகம் செய்து திரும்பவேண்டிய திகதி ஆகையாலும், இன்று எதிராளி மன்றில் சமுகமில்லை ஆகையாலும், ஒருமுக விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்தற்கமைய, வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டு.

வழக்காளியின் பிராது, வ1, வ2, வ3 ஆகிய ஆவணங்கள், வழக்காளி இன்று மன்றுக்கு அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து, வழக்காளி பிராதில் கோரிய நிவாரத்தைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு, எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்பு செய்துள்ள காரணத்தினால் எதிராளிக்கும் வழக்காளிக்கும் இடையே நீதிமுறைப் பிரிவு நிலைக்கட்டளையை இதனால் பிறப்பித்து தீர்வையிடப்படகிறது.

2006 ஆம் ஆண்டு மாசி மாதம் 9ஆம் திகதி

வரைபு
வழக்காளியின் சட்டத்தரணி
(பவானி சற்குணராசா),

(ஓம்) இ.த.விக்னராஜா,
மாவட்ட நீதிபதி.

மேற்படி எதிராளிக்கு,

இவ்வழக்கில் மேலே விவரிக்கப்பட்டவாறாக தீர்வை பதியப்பட்டுள்ளதால், அதற்கு உமக்கு ஆட்சேபணை எதுவும் இருப்பின் இது பிரசுரிக்கப்பட்டு 14 நாள்களுக்குள் இம்மன்றில் தோன்றி உமது ஆட்சேபணையைத் தெரிவிக்கும்படி இதனால் அறிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு மாசி மாதம் 22ஆம் திகதி

மன்றின் கட்டளைப்படி
து. சிறீமோகன்
பதிவாளர்.

(சி /48093)(26.15.34)

## அச்சுவேலி சிற்றூர்திச் சேவைச்சங்கம் வளலாயில் இருந்து பஸ் சேவை

எமது சங்கம் 01-03-2006 புதன்கிழமை தொடக்கம் வளலாயில் இருந்து தினசரி ஐந்து பஸ் சேவைகளை (முற்பகல் 7 மணி, 9.30 மணி, 10.30 மணி, பிற்பகல் 3 மணி, 5 மணி) நடத்தவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

க.பங்கஜன்,
செயலாளர்.

சி.தர்மகுலசிங்கம்,
தலைவர்.

(சி/48091)(26.15.34)

## துயர் பகிர்வு

கலையழகன் மதிசன் பழைய மாணாக்கர் அவையின் செயலாளரான செல்வி கி.கலையமுதா அவர்களின், மருமகனின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

பள்ளிக்குழுமம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(47348)(26.15.34)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

01.03 2006

அரியாலையைச் சேர்ந்தவர்களும் தற்போது சுவிஸில் வசிப்பவர்களுமாகிய இராஜேந்திரகுமார் - விஜிலா தம்பதியினரின் செல்வப் புதல்வி செல்வி

**வைஷ்ணவிகா**

அவர்கள் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (01-03-2006) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

வைஷ்ணாக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தி, மாமா, சின்னமாமா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, அத்தை, அக்கா, மச்சிமார்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாளின் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு,காலம் நலமுடன் வாழ்கவென உளமார வாழ்த்துகின்றனர்.

22,கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஆ.செல்வநாதன்
(அம்மப்பா)




(47333) (26.26.34.15)

வ
கணபதிதுணை

## சௌள உபநயன பிரம்மோபதேச முகூர்த்த அழைப்பு

திருவருள் துணை நிற்க விநாயகப் பெருமானின் அருளாசியோடு நிகழும் பார்த்திப வருடம் மாசிமாதம் 18ஆம் நாள் (02-03-2006) வியாழக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் பூர்வபஷ திருதியைத்திதியும் சித்தயோகமும் கூடிய முற்பகல் 11.07 மணிமுதல் 12.07 மணிவரையுள்ள ரிஷபலக்ன சுபமுகூர்த்த வேளையில்

காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் முன்னாள் பிரதமகுரு
க.மங்களேஸ்வரக்குருக்களின் பூட்டனும்
தாமோதரஐயரின் பேரனும் எமது கனிஷ்ட குமாரனுமாகிய

**சிரஞ்சீவி இ.கோபிநாதசர்மாவிற்கு**

சௌள உபநயன பிரம்மோபதேசஞ் செய்ய திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயனகுரு - சிவஸ்ரீ - தா.மகாதேவக்குருக்கள் (காயத்திரிபீடம், இணுவில்.)

தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ தா.இரவீந்திரகுருக்கள்,
ஹேமராணி தம்பதியினர்.

திருமதி - கௌரி தாமோதர ஐயர் ,
பிரம்மஸ்ரீ - ச.கேசவக்குருக்கள் தம்பதியினர்,
பிரம்மஸ்ரீ - இ.உமாசுதசர்மா.

திருமதி : இராஜலட்சுமி கனேசசர்மா,
பிரம்மஸ்ரீ - கணேசசபாபதிக்குருக்கள் தம்பதியினர்,
செல்வி.இ.தாரணி.

பிள்ளையார்கோயில்,
பத்தமேனி, அச்சுவேலி.

(47107)(26.34.15)

## யு.என்.ஹபிற்றாஸ் நிறுவன பிரதிநிதிகள் இன்று யாழ்.வருவர்

யு.என்.ஹபிற்றாஸ் நிறுவனத்தின் யப்பான் நாட்டுப் பிரதிநிதி ஜான் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். இவருடன் நிறுவனத்தின் இலங்கை அலுவலகத்தில் முக்கிய பிரமுகர்களான என்.பத்மநாதன், பாமிஸ் ஸ்மாயில், கொன்ராட் திசேரா ஆகியோர் அடங்கிய குழுவினரும் யாழ்.வரவுள்ளனர்.

இன்று புதன்கிழமை காலையில் யாழ். வருகை தரும் குழு முற்பகல் 11.45 மணிக்கு யாழ். அரச அதிபர் கே.கணேசை செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

பிற்பகல் 1.45 மணிக்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்தைச் சந்தித்து இவர்கள் கலந்துரையாடுவர். தொடர்ந்து நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை நேரில் சென்று பார்வையிடுவர்.

நாளை வியாழக்கிழமை. நிறுவனத்தால் பொலிகண்டியில் செயற்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டத்தையும் நேரில் சென்று பார்வையிடுவர் என நிறுவன நகர முகாமையாளர் கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

(த-202)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

*22-12-2005 அன்று 11.50 a.m. மணியளவில் சங்கானை அரசினர் வைத்தியசாலை பற்சிகிற்சை நிலையத்தில் ஒரு கழுத்துச்சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.*

தொடர்பிற்கு: Dr.V.R. டேவிற், பல்வைத்தியர்,
அரசாங்க வைத்தியசாலை, சங்கானை.

(47422)

## VNC

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1 அடி நீளம் 4" அகலக் கல்லின் விலை 26/= மட்டும். நேரடியாகப் பார்வையிட்டு முற்கூட்டியே பதிவுசெய்து பெற்றுச்செல்லவும்.

**VNC**

கும்பழாவளை பிள்ளையார் கோயில் அருகில்
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

(46913) (21.11.17)

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

**உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி**

◇Assembling ◇Upgrading ◇Troubleshooting ◇Fault Finding ◇Repairing ◇Servicing ◇Software Installation ◇Configuring ◇Introduction to Networking

**Course Contents**

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
06/03/2006 :- 08.30-4.00

**Hard ware பயிற்சி**

- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Troubule Shooting / Maintenance.

**Software பயிற்சி**

- Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- Software Install செய்யும் முறை
- Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்

- பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane , Jaffna.
Telephone :- 021-2228250 , 0777-222422

4ம், 5ம் திகதிகளில் ஏனைய அனைத்துக் கணனிக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

# வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகின் வணிகமாணி -1 பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகினால் நடத்தப்பட்ட வணிகமாணி பகுதி -1, 2002 இற்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

தர்மகுலசிங்கம் பானுரேகா, லட்சுமணன் துஷியந்தி, சுப்பிரமணியம் காமினி, பரமானந்தன் கரிதா, யோகராஜா ஜலயா, பாலசிங்கம் யோகானந்தம், பாலசுப்பிரமணியம் கமலவாசகி, சரவணபகவான் கார்த்திகா, கமலேஸ்வரன் கஜரூபினி.

சிவலிங்கம் கிரிசாந்தி, பாலசிங்கம் குமுதினி, ஆரோக்கியநாதன் லெனஸ்நிலோசன், சிவகரன் பிரதீபா, பிறின்ஞ் அருள்செல்வம் பிரவீனா, சரசானந்தராஜா பிரியதர்சினி, சின்னத்துரை ரஜிதா, கற்பகநாதன் ராதிகா, ராஜகோபால் சகிலா, மரியதாஸ் சபீனா நைற்றிங்கேல், சண்முகலிங்கம் சபேஸ், சந்திரன் சௌந்தனி, கணேசமூர்த்தி சயரூபன், பொன்னையா சகுந்தலா, சிவசர்மா சைலாயா.

சண்முகலிங்கம் சிவரஞ்சனி, பரமலிங்கம் சிவரஞ்சினி, ராமசாமி சுபாசினி, ராஜரட்ணம் சுகந்தரூபி, பரமானந்தன் விஜயகுமார், மகாலிங்கம் விபுலானந்தன், சரவணமுத்து ரஜினி, திருஞானம் லின்றாஸ், யோகேஸ்வரன் நிமலன், ராஜரட்ணம் ஜெயகௌரி, சிறீஸ்கந்தவரோதயன் கஜசனா, திருநாவுக்கரசு முருகதாஸ்.

சண்முகரட்ணம் சண்முகப்பிரியா, கந்தசாமி சிறிகரன், கமலநாதன் மலர்விழி, பசுபதி விஜயதாஸ், தேவராஜா சிந்துஜா, சிவசுப்பிரமணியம் பிரபாகரன், சரவணமுத்து ஆனந்தகுமார், வேலாயுதபிள்ளை பிரபானந்தன், திருநாவுக்கரசு சுகுணமதி, பேரம்பலம் ரஞ்சினி, சிவஞானம் சிவகாந்தன், கணேசராஜா, குகனேந்திரன், கணேசு கமலதாசன், கந்தசாமி செந்தூரன், தம்பையா மன்சூரன், செல்லையா கிருபாகரன், சிவநாதன் மயூரா. (த-14)



லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306 பி.1 இன் உப ஆளுநர் பதவிக்குப் போட்டியிடும் லயன் செல்வரத்தினம் இராகவனை அறிமுகம் செய்யும் வைபவம் கடந்த 19 ஆம் திகதி யாழ்.ப.நோ. கூ. சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் லயன் செல்வரத்தினம் இராகவன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட லயன்ஸ் கழகப் பிரமுக்ர்களையும் படத்தில் காணலாம்.- [3-203]

## வைத்திய நிறுவனத் தலைவர்கள் கூட்டம்

குருநகர், மார்ச்.1

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் செயற்படும் சகல வைத்திய நிறுவனத் தலைவர்கள் பங்கு பற்றும் மாதாந்தக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.த-51)


**அகில இலங்கை இந்துமா மன்றத்தின் 50ஆவது ஆண்டு பூர்த்தி மாநாடு**
**(01.04.2006 - 02.04.2006)**

*18.02.2006 சனிக்கிழமை அன்று உதயன் இதழில் 12ஆம் பக்கத்தில் வெளிவந்த விளம்பரத்தைப் பார்க்கவும். இந்து, ஆலய, கல்வி, சமூக, கலாசார பிரச்சினைகள் பற்றிய தங்களின் கருத்துக்களை எமக்கு உடனடியாக அனுப்பவும்.*

**அகில இலங்கை இந்துமா மன்றம்,**
இல.91/5, சேர். சிற்றம்பலம்,
A.கார்டினர் மாவத்தை, கொழும்பு -02.
Tel - 0112434990 Fax - 0112344720
(சி/48097)
(32-15-34-42)



**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை**

**மகளிர்களுக்கான இலவசப் பயிற்சி நெறிகள்**

*யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வித் திட்டத்தின் கீழ் மகளிர்களுக்குப் பின்வரும் பயிற்சி நெறிகள் சபையால் ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிற்சி பெற விரும்புபவர்கள் பயிற்சிகள் தொடர்பான விவரங்களையும், விண்ணப்பப்படிவத்தையும் சபையில் ரூபா 10/- செலுத்திப் பெற்று விண்ணப்பிக்கவும்.*

1) மனைப்பொருளியல் டிப்ளோமாப் பயிற்சி
2) மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி
3) தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி
4) குறுகிய கால சுயமுயற்சிப் பயிற்சி

*விண்ணப்ப முடிவு திகதி: 15-03-2006*

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: **செயலாளர்,**
யாழ்.மாவட்டக்கூட்டுறவுச்சபை,
கூட்டுறவாளர் விரசிங்கம் மண்டப
கட்டடத் தொகுதி, 2ஆம் மாடி,
இல.12, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/48108)
(26-15-34-42)



**கடைகள் வாடகைக்கு**

இல.70, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தியில் உள்ள புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் கடைகள் வாடகைக்குண்டு. (புடைவைக்கடை, பார்மசி, பன்சி முன்னுரிமை).
தொடர்பு: இல.256, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
0777 111147
021 222 7354
மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.



**MAHALUXMI REAL ESTATE**
HOUSE & Property Purchase & Sales
**மகாலக்ஷ்மி றியல் எஸ்டேட்**
**நெல்லியடிக் கிளை இலக்கம் 2 இன்**
**"மாபெரும் திறப்பு விழா"**

இடம்: துவார்ரகா
கொடிகாமம் வீதி,
(அரசடிச் சந்தி அருகில்)
நெல்லியடி, கரவெட்டி.
காலம்: இன்று புதன்கிழமை
01-03-2006
நேரம்: பிற்பகல் 4 - 5 மணி வரை

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகம்: 0773053082
(47429)(26-15-34-42)



**University of Jaffna, SriLanka**
**IRQUE Project**
**Post of Secretary**
**(on contract)**

We are looking for a Secretary with the following attributes to join our project team:
- Good Secondary Education
- High Level of Competency in English
- Competency in Excel, MS Office Packges
- Age not more than 55
- A minimum of two years experience in a similar capacity is preferred.

Salary and terms are negotiable.

Application giving complete Bio-data with copies of relevant certificates should be forwarded to the Director, LTS, IRQUE project, University of Jaffna to reach him within 07 days of this advertisement.

**Director,**
**IRQUE Project,**
University of Jaffna,
Jaffna.
27.02.2006.
(C/48102)(42)


## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் வீரசிங்கம்



உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் வீரசிங்கம் அவர்கள் நேற்று (28.02.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் புஸ்பலீலா (கனடா), புஸ்பநாதன் (ராசா), புஸ்பலோசனி, புஸ்பராசா (ஹொலண்ட்), காலஞ்சென்ற புஸ்பகாந்தன், புஸ்பகரன், புஸ்பராணி, புஸ்பராதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சற்குணதேவி, சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), சந்திரவதனி, பூமலர், குகனேஸ்வரன், சிறீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமியும் சுனீத்திரா (கனடா), நிர்மலன் (கனடா), நிறஞ்சன் (கனடா), நிரோதயன் (கனடா), நிரூபன்(கனடா), அகிலன் (லண்டன்), காலஞ்சென்ற ரமணன் மற்றும் பிரதீபன் (தபாற் கந்தோர், உரும்பிராய்) பிரபாகர் (லண்டன்), பாஸ்கர் (லண்டன்), சிறீதர் (ஆசிரியர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), செந்தூரன் (ஹொலண்ட்), சுதன் (ஹொலண்ட்), நிரேகா (ஹொலண்ட்), அர்ச்சனா (ஹொலண்ட்), ஜெயன், ஜெனனி, நிசானி, ஹேமாலினி, ஜீவதா, சர்மிளா, தர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிராமி, ராகவி, பிரணவி, அமிரா, சாயிரா, ராகுல், பிரசன்னா, ஐஸ்வினி, சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2006) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் எருவன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.புஸ்பநாதன் (ராசா),
வி.புஸ்பகரன் (வெள்ளை),
(மகன்மார்).

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*
(47424)(42-34-15)

## கண்ணீர் அஞ்சலி

*'எமது பாடசாலை ஆசிரியர்*
*சி.துரைராசா அவர்களின் அன்புத் தந்தை*

அமரர் **ஆறுமுகம் சின்னையா**

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

யா/கோட்டி நமசிவாய வித்தியாலய
பாடசாலைச் சமூகம்.
(47426)(42-15-34)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சபாபதி கணபதி**
*(கால்நடை வைத்தியர், ஊர்காவற்றுறை)*



மலர்வு 11-05-1925 உதிர்வு 07-03-2000

திதி: 01-03-2006

கண்ணைப்போல் நீர் காத்த
கண்மணிகள் கண்ணீருடன்
நினைவு கூருகின்றனர்.
வாழ்வளிக்கும் சூரியன்
போல்
எங்களை மேலிருந்து
போசித்திடுங்கள்.

*ஆத்மசாந்திக்காக*
*இறைவனை வேண்டும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர், பெறாமக்கள்.
(47432)(32-11-19-42)

## மரண அறிவித்தல்

### திருமதி மோனகுரு ஞானவல்லியம்மாள்

புதுவளவு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியைத் தற்போது வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி மோனகுரு ஞானவல்லியம்மாள் அவர்கள் நேற்று (28.02.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோனகுருவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சக்திவேல் (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற ஞானகலாம்பிகை, காலஞ்சென்ற கெயானன மூர்த்தி (அப்பர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேந்திரன் குடும்பம்
(பெறாமகன்).
(சி/48104)(42-15-34)

# நூற்றாண்டு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்1

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்சங்க நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைப் போஷகர் தா.சோமசேகரம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இந்துக் கல்லூரியின் நம்பிக்கை நிதியத் தலைவர் வி.கயிலாசபிள்ளை, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்பு கிளைத் தலைவர் ச.ராகவன், கல்லூரியின் முன்னாள் அதிபர் 'சுடர்' மகேந்திரன், கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஜேர்மன் கிளைத் தலைவர் கே.சி. இராமநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.

கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவின் தொடக்கவுரை, மலர் குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேலின் அறிமுகவுரை, மலராசிரியர் பேராசிரியர் கா.குகபாலனின் வெளியீட்டுரை மற்றும் மூத்தோர் கௌரவிப்பு ஆகியன இடம்பெறும்.

பழைய மாணவரான இ.ச.பே.நாகரத்தினம் முதல் பிரதியைப் பெறுவார். (3-203)

## வங்கிநேரம் இன்று முதல் நீடிப்பு

குடாநாட்டில் இயங்கும் வங்கிகளின் வாடிக்கையாளர் சேவை இன்று முதல் ஒரு மணி நேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதங்களில் இடம்பெற்ற அசம் பாவித சம்பவங்கள் காரணமாக வங்கிகளின் வாடிக்கையாளர் சேவை பிற்பகல் 2 மணி வரை மட்டுப் படுத்தப்பட்டிருந்தது.

தற்காலிகமாகத் தோன்றியுள்ள சாதகமான சிவில் நிர்வாக நிலைமையைக் கருத்திற்கொண்டு வாடிக்கையாளர் கொடுக்கல், வாங்கல் நேரம் இன்றிலிருந்து பிற்பகல் 3 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (3)

## பாதுகாவலர் சங்கக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.மார்ச்1

காணாமல்போனோர், பெற்றோர் பாதுகாவலருடனான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பளை பிரதேச செயலகத்தில் நடை பெறவுள்ளது. காணாமல் போனவர்களின் பெற்றோர் உறவினர்களைக் கலந்து கொள்ளுமாறு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் அண்மைக்காலமாக இடம் பெற்ற அசம்பாவிதங்களின்போது காணாமற்போனவர்களின் பாதுகாவலர்களையும் இதில் கலந்துகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-203)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர்
அம்பலவாணர் தணிகாசலத்தின்
அன்புத் தாய்
திருமதி அம்பலவாணர் கதிராசிப்பிள்ளை
காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்,
மந்துவில்,
கொடிகாமம். (சி/48110)(32-11-34)

அதிபர்,
ஆசிரியர்கள்.



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6528783 முதல் 6539034 வரை. சீட்டிழுப்பு இல. 215 திகதி 27-02-2006

வெற்றி எண்கள்

2 1 6 3 8 0 சுப்பர் எண் 13

ஜக்பொட் பரிசு ரூ. 11,232,325/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 11,232,325/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 91 | 5,000/= | 455,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 889 | 500/= | 444,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8885 | 50/= | 444,250/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 88060 | 10/= | 880,600/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/= | 40,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 1,000/= | 86,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 894 | 100/= | 89,400/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8809 | 20/= | 176,180/= |
| | | மொத்தம் ரூ. | 4,065,930/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,668,530/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
| --- | --- |
| பொலன்னறுவ | 6530020-1-78 |
| கம்பஹா | 6538802-6-02 |
| புத்தளம் | 6536192-8-86 |
| களுத்தறை | 6537069-6-83 |
| கொழும்பு | 6536807-0-67 |
| மொனராகலை | 6534631-3-32 |
| இரத்தினபுரி | 6535560-5-21 |
| கேகாலை | 6532277-0-16 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 11,479,400/-

தொடர் இல. 7450653 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 மார்ச் 02ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


# மீனவர் சம்மேளனத்தில் நாளை இரத்ததானம்

நல்லூர்,மார்ச்1

யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் இரத்ததான நிகழ்வு நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாவட்ட சம்மேளப் பணிமனையில் அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூற்றுக்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்யவுள்ளனர் எனவும் -

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கி வைத்திய அதிகாரிகள் இதில் கலந்துகொள்வார்கள் எனவும் சம்மேளனத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (த-111)

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி,மார்ச்1

தென்மராட்சி கல்வி வலய நலன்புரிக் கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று பி.ப.3.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் கழகத் தலைவர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கழகச் செயலாளர் தா.பாலசுந்தரம் கேட்டுள்ளார். (த-117)

## தென்மராட்சியில் பாவனையாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு

தென்மராட்சி,மார்ச்1

தென்மராட்சி பிரதேச பாவனையாளர் ஒருங்கிணைப்புக் குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இந்த குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

குழுவின் தலைவராக இ.விஸ்வலிங்கமும் செயலாளராக கு.நடராசாவும் பொருளாளராக வ.சின்னத்தம்பியும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுடன் 12 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (த-117)

## முன்பள்ளிக் கட்டட திறப்புவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 1

பருத்தித்துறை கற்கோவளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆதவன் முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் தமிழர் மன்றம், விராங்வோட் பராமரிப்பு நிலையம், பேரீக்ஸ்ராச நண்பர்கள், பீஜஆ நிறுவனம், சோலிங்கன் - ஜேர்மனி ஆகியோரின் நிதியுதவியுடன் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (3-203)

## ராமகிருஷ்ணரின் ஜனன தினம்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்று புதன்கிழமை ஸ்ரீஇராமகிருஷ்ண பரம ஹம்சரின் 171ஆவது ஜனன தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (3-173)


CHEMISTRY
(Group Class)
A/L 2006
Paper Class
பிரிவு - II
ஆரம்பம்: wed.
01.03.2006
2.30 p.m.
Y.Mahilnan (B.Sc.)
35 Chetty Street,
Jaffna
(Near Thinakural Rest.)


# திருகோணமலையில் புலிகள் பதுங்குகுழி அமைக்கின்றனராம்

திருகோணமலை,மார்ச்1

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் பதுங்கு குழி ஒன்றினை அமைத்துவருகின்றனர் என்று ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டம் மூதூர் நகரை அடுத்துள்ள செல்வநகரில் இராணுவ முகாம் அண்மித்த பகுதிகளில் புலிகள் பதுங்குகுழியுடனான பாதுகாப்பு அரண்ஒன்றினை அமைத்து வருகின்றனர் என்று திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளையும் ஆய்வுகளையும் கண்காணிப்புக் குழு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-13)

## மிருசுவில் குடியிருப்பாளர்களுக்கு விரைவில் காணி உறுதி

தென்மராட்சி,மார்ச்1

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் உள்ள காணிகளுக்கு சொர்ணபூமி அளிப்புத் திட்டத்தின் கீழ் குடியிருப்பாளர்களுக்கு விரைவில் உறுதிகள் கையளிக்கப்படவுள்ளன.

குடியிருப்பாளர்கள் காணி உறுதிக்குரிய சேவைக் கட்டணத்தினை பிரதேச செயலக காணி உத்தியோகத்தரிடம்செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)


## தொழிலாளர்கள் தேவை

இயந்திரம் மூலம் கழிவகற்றல் வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் தேவை. கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

கிளீன்வெல்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (47434)(32-)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

உதயம் 12 - 02 - 1935



அஸ்தமனம் 31 - 01 - 2006

### கதிர்காமு இராசதுரை

*31.01.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து அனுதாபம், அஞ்சலி, ஆறுதல் தெரிவித்து, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (02.03.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சுன்னாசம் தெற்கு,
சுன்னாகம். (47436)(32-34-11)

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி செல்லமுத்து பொன்னையா



செம்பியன்பற்று தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லமுத்து பொன்னையா அவர்கள் 28.02.2006 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தர் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தர் பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசுவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்பு மைத்துனியும் தங்கராசா (சமாதான நீதவான்), காலஞ்சென்ற மயில்வாகனம், தர்மகுலசிங்கம் (இங்கிலாந்து), சிறிராமச்சந்திரன் (பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.ச வடமராட்சி கிழக்கு), இராசரத்தினசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கமலா, திருமகள், குலேந்திரா (இங்கிலாந்து), தவமலர் (நூலகர், கொக்குவில்), ஜெயகௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ராஜன்- மோகனாம்பிகை (சுவிற்ஸர்லாந்து), ஜெகதாம்பிகை, ஞானானந்தன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்) கிருபாகரன், வதனவேணி (நியூசிலாந்து), கார்த்திகா (பிரதேச சபை ஊழியர்), கௌசிகா, சிறிஸ்கந்தராஜா இந்துமதி (ஆசிரியை), இந்துவாசன் (கிளிநொச்சி உதவியாணையாளர் அலுவலகம) இந்துசசி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்) மயூரதி, மயூரதன், மயூலக்சன், கௌதமன் (பிரான்ஸ்), இராஜிதன்(பிரான்ஸ்), ஷர்மிலி (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், செந்தூரன் (சுவிற்ஸர்சலாந்து), லோஜிகன் (நியூசிலாந்து) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.02.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்பியன்பற்று தெற்கு மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/48096)(32-34-11)

# இலங்கை மெய்வன்மைச் சங்கத் தலைவர் தமிழீழ விளையாட்டுத்துறையுடன் சந்திப்பு

கிளிநொச்சி,மார்ச் 1

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவுக்கும் இலங்கை மெய்வன்மைச் சங்கத் தலைவர் டேவின் பெரேராவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த மாதம் 25ஆம் திகதி தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இளையோர் செயற்பாட்டு நிறுவன கௌரவ ஆலோசகர் கலாநிதி எதிர்வீரசிங்கம், தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம.பத்மநாதன், செயலாளர் அன்ரன் அன்பழகன், வடக்கு - கிழக்கு மெய்வல்லுனர் சம்மேளனத் தலைவர் தெய்வேந்திரம் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின் போது வடக்கு - கிழக்கு மெய்வல்லுனர் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்டது.

மாவட்டப் பயிற்சி நிலையங்கள் பெயரளவில் செயற்பாடுகள் இன்றி காணப்படுவது குறித்து டேவின் பெரேரா கருத்து வெளியிடுகையில், இந்த நிலையங்களினுடாக மெய்வன்மை உதைபந்து, கரப்பந்து , கபடி மற்றும் வலைபப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் இவற்றிற்கான உபகரணங்கள் வழங்குவதற்கும், பயிற்றுநர்கள் நியமிக்கப்படுவதற்கு விளையாட்டு அமைச்சு ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவுத் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 15 வயதிற்குட்பட்டோர், 20 வயதுக்குட்பட்டோர் மற்றும் திறந்த பதிவுக்கான தொடர் பயிற்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சி பெறுவோருக்கு மாதாந்தம் ரூபா ஆயிரம் வீதம் புலமைப் பிரிசில் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதற்கான தெரிவுகள் கலாநிதி எதிர்வீரசிங்கத்தால் வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் எனவும் முடிவுசெய்யப்பட்டது. (த)



## டாக்டர் பிலிப் ஞாபகார்த்த உதைபந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம்,மார்ச் 1

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் அமரர் டாக்டர் ஜே.பி.சி பிலிப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான இரண்டாம் கட்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிநாளை வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப 3.30 சென்.றோக்ஸ் வி.க. எதிர் யாழ். பல்கலைக்கழகம்.

பி.ப 4.30 சென்.மேரிஸ் வி.க. எதிர் சென். மைக்கல் வி.க.

(த-190)

## பட்மின்ரன் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 1

யாழ்.வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பட்மின்ரன் போட்டி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் -

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டி நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் இடம்பெறும் என யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) குமாரசுவாமி தெரிவித்துள்ளார். (த-190)

## தெல்லிப்பழைப் பிரிவு போட்டிகள் சனியன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 1

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான பெண்களுக்கான கிரிக்கெட், கரப்பந்தாட்டம், எல்லே போட்டிகள் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சிறிபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுகின்றன.

ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியும் அன்று நடைபெறும் என விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (த-190)

## எல்லே போட்டியில் மனோகரா வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச் 1

கரவெட்டி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான எல்லே போட்டியில் முதலாவது இடத்தை மனோகரா வி.கவும் இரண்டாவது இடத்தை பொம்மஸ் வி.கவும் பெற்றுள்ளன. (-190)




## சிநேகபூர்வ கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான 19 வயதிற்கு உட்பட்டோருக்கான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-190)

## மக்கள் வங்கி அனுசரணையுடன் பூப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 1

யாழ்.மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டுக் கழகம் மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் பூப்பந்தாட்ட திறந்த போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனப் போட்டிக் குழுவின் தலைவர் எஸ்.மோகன் தெரிவித்துள்ளார். (த-190)

## சுயதொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் முன்னேற்ற அமைச்சு சுயதொழில் ஈடுபட விரும்புபவர்களின் விவரங்களைச் சேகரிக்கவுள்ளது.

சுயதொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட ரீதியாகச் சுயதொழில் முயற்சியில் ஈடுபடவுள்ளோரின் உத்தேசித்த சுயதொழில், எதிர்பார்க்கும் வசதிகள் மற்றும் அவர்களிடமுள்ள திறமைகள் போன்ற விவரங்களைச் சேகரித்து அனுப்புமாறு அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபையைக் கோரியுள்ளது.

இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடவிரும்புவர்கள் 'கைத்தொழில் அபிவிருத்திச்சபை' மாவட்டக் காரியாலயம், யாழ்ப்பாணம் (கச்சேரி முன்பாக) என்னும் முகவரியுடன் தொடர்புகொண்டு தங்கள் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கைத்தொழில் அதிகார சபையின் யாழ்.மாவட்டக் காரியாலயம் கேட்டுள்ளது. (த-202)

# தென்மராட்சிக் குடும்பங்களுக்கான நஷ்டஈடு; விரைவில் கிடைக்க ஆவண செய்யக் கோரிக்கை

## யாழ்.அரசாங்க அதிபருக்கு நலச்சேவைகள் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட தென்மராட்சி மக்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை விரைந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்-

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம். இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, செயலாளர் யோ.ஜெயக்குமார் ஆகியோர் கையொப்பமிட்டு அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில்:-

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 1999ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்த யுத்தம் 2002ஆம் ஆண்டு முற்பகுதி வரை நீடித்தது அனைவரும் அறிந்ததே.

இலங்கையில் இதுவரை நிகழ்ந்த உள்நாட்டு யுத்தங்களில் மிகவும் கொடூரமானதும், அதிக உயிர்களைக் காவு கொண்டதும், மக்களின் வீடுகள், உடைமைகளுக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்திய யுத்தமாக இது கணிக்கப்படுகின்றது.

இந்தக் கொடிய யுத்தத்தின் வடுக்களை இன்னமும் தென்மராட்சிப் பகுதியெங்கும் காணக்கூடியதாகவுள்ளது.

தென்மராட்சி மக்கள் தமது இழப்புகள் குறித்து, நஷ்டஈடு பெறுவதற்கான விண்ணப்பங்களை தென்மராட்சிப் பிரதேச செயலர் ஊடாக உரிய தரப்பினருக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பியோரில் அநேகமானோரில் வயது முதிர்ந்தவர்களும் அடங்கியுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆகவே, தென்மராட்சி மக்கள், தமக்கேற்பட்ட சேதங்களுக்குரிய நஷ்டஈட்டை கூடிய விரைவில் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனத் தங்களை மிகவும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

# வெளிவாரிப் பதிவுகள் அலகின் நுண்கலைமாணித் தேர்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்1

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு நடத்தும் நுண்கலைமாணி முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருடப் பரீட்சைகள் (2001) எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

நுண்கலைமாணி முதலாம், மூன்றாம் வருடப் பிரிவுகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரையும் நுண்கலைமாணி இரண்டாம், நான்காம் வருடப் பிரிவுகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையும் யாழ். பல்கலைக்கழத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் அனுமதி அட்டைகளையும் எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

கல்வியாண்டு 2003/2004இல் கலைமுதற்தேர்வு, வணிகமுதற்தேர்வு, கலைமாணி பகுதி I, நுண்கலைமாணி (சங்கீதம்/நடனம்) ஆகிய கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவுசெய்தவர்கள் தங்களுக்குரிய மாணவர் பதிவேட்டை நாளை வியாழக்கிழமை தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பிற்பகல் 2 மணிமுதல் பெற்றுக்கொளுமாறும் -

மேலதிக விவரங்களுக்கு 021 - 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் பதிவாளர் கேட்டுள்ளார்.

(த-202)

# தவக்காலச் சிந்தனை 1

## மனமாற்றத்தின் வழியில் மாண்புடன் வாழுவோம்

**இன்று திருநீற்றுப்புதன்**

கிறிஸ்தவர்கள் அனுசரிக்கும் தவக்காலம் திருநீற்றுப் புதனாகிய இன்று ஆரம்பமாகிறது. கிறிஸ்துவின் நற்செய்தி, பாடுகள், மரணம் என்பவற்றைச் சிந்தித்து உயிர்ப்பு என்னும் புதிய வாழ்வுக்குள் பிரவேசிக்க எம்மை அழைத்து உருவாக்கம் செய்யும் காலமே தவக்காலம். திருநீற்றை எமது நெற்றியில் பூசி 'நற்செய்தியை நம்புங்கள்' என்ற விசுவாச உச்சானத்தோடு மண்ணால் உண்டான நாம் மண்ணுக்கே திரும்புவோம் என்பதை நினைவூட்டி பாஸ்கா என்னும் கடத்தலுக்கு எம்மைத் தயார்ப்படுத்தவே இந்தத் தவக்காலத்தின் நாற்பது நாள்கள்.

இந்த நாற்பது நாள்களுக்கான பின்னணி என்ன? இந்நாள்களில் நாம் என்ன செய்யவேண்டும்.

ஆதியிலே மனித இனம் இறைவனை மறந்து சீர்கெட்டு, தீய செயல்களில் ஈடுபட்டு வந்தது. மாசற்ற மனுக்குலத்தை உருவாக்க நினைத்த இறைவன் நாற்பது நாள்கள் பெருமழையை வருவித்து அவர்களை அழித்து நேர்மையாளரான நோவா குடும்பத்தைக் காப்பாற்றினார். இஸ்ராலேயர் எகிப்து நாட்டின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட அங்கிருந்து புறப்பட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைய எடுத்தகாலம் நாற்பது ஆண்டுகள். இயேசு பணிவாழ்வைத் தொடங்குவதற்கு முன் நாற்பது நாள்கள் பாலை நிலத்தில் நோன்பிருந்தார். இறை வல்லமையைப் பெற்று, சாத்தானின் ஆதிக்கத்தை முறியடித்தார். இவற்றை நினைவுபடுத்திப் பழமையிலிருந்து புதுமைக்கும் அலகையின் ஆட்சியிலிருந்து இறையாட்சிக்கும் நுழையவே நாற்பது நாள்கள் தரப்பட்டுள்ளன. நாமும் புதிய வாழ்க்கை அமைத்திடச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

சிறப்பாக இக்காலத்தில் ஆடம்பரங்களைத் தவிர்த்து எம்மை ஒறுத்து அதனைத் தேவையுள்ளோருக்குப் பகிர்ந்துகொடுப்போம். செப, தவ புண்ணியங்களால் பிறர் வாழ்வை வளப்படுத்துவோம். வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாது விளம்பரமற்ற உதவிக்கரம் நீட்டி வெளிவேடத்தனத்திற்குச் சாவு மணி அடிப்போம். அப்போது மறைவாயுள்ளதை அறியும் இறைவன் தகுந்த கைமாறு தருவார்.

புனித வாரத்திற்குள் சங்கமிக்க மனமாற்றம் பெறுவோம். எம்மைப் புடமிட்டு மனித மாண்பினைக் காப்போம்.

- எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

# North East Youth Action Organization (NEYAO)

## Call for Applicants for the position of
## Project Manager and Technical Officer

**NEYAO, with funding from FIFA will be constructing eight football training centres in seven districts in the NorthEast. It is also in the process of finalizing the projects to build Youth Centres with financial contribution from Save the Children in SriLanka, UNICEF, UNDP and other organizations. Candidates who wish to apply for the positions listed below should be prepared ro attend an interview in Kilinochchi if they are short listed. Interview for the Project Manager will be in English. The education and other requirements for the positions are as follows:**

### Project Manager.
1. A pass or better in B.Sc. or B.A. degree in computer science, management, commerce, economics, English or geography from a recognized university. Those without a degree but have a post - secondaty qualification and five or more years of work experience and are **competent in the skills listed below** will be considered for the interview.
2. Very good knowledge in English language enough to write or assist in writing project proposals, periodic progress and evaluation reports. Communicate in English with those who do not know Tamil, in person, through telephone and email.
3. Very good knowledge of Microsoft Office applications including typing skills (at least 20 words per minute), use of Word, Excel and Power Point.
4. One or more years of fulltime work experience is preferred but not mandatory.
5. Demonstrated dedication to development work in the NorthEast is required.
6. The selected candidate will assist Volunteer Consultant Dr.N.Ethirveerasingam and should be prepared to take over his responsibilities at the end of 2006.

### Technical Officer
1. A three year Diploma from a recognized Technical College. Those with a two year Certificate will be considered if they have at least five years of work experience related to their Certificate.
2. Competent in the use of CAD.
3. Ability to determine and prepare a BOQ for permanent concrete buildings.
4. Ability to use survey instruments to determine slopes and construct level fields.
5. Able to visit building sites and supervise progress of the projects and meet the building schedules.
6. Should have licence to operate a motorcycle. Possession of a motor cycle is an advantage.
7. Knowledge of English good enough to communicate verbally and in writing with those who do not speak English, and write monthly progress reports.
8. Computer skills in using Word and Excel in addition to CAD.

### Conditions
1. Salary for each of the positions is Rs.15,000. per month.
2. Only those who are willing to sign a binding contract for one year should apply.
3. Selected candidate should be willing to travel extensively to project sites in all Districts in the NorthEast.

may be required occasionally, iii). Four weeks of leave can be taken during one year but only two weeks can be continuous at the end of 11 months, and iv). Willing to take up appointment within one week of the offer.

### Application Guideline
**Include:**
1. Typed Application Letter, not more than two short paragraphs, in English, stating the position you are applying for and the titles of your qualifications.
2. Photocopies of the original certificates, diplomas and degree you have obtained from the GCE 'A' Level onwards.
3. One page typed Bio-data, in English, listing telephone number and address where we can contact you, qualifications starting with the 'A' Level, employment lists if any, and names addresses and telephone numbers of two referees, with their permission, who are not close relatives, but one of whom should be your lecturer.

**Applications for both positions close on March 15,2006**


## வடமராட்சியில் வெங்காயம் அறுவடை

வடமராட்சி, மார்ச்.1

வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

இம்முறை அதிக அளவு நிலப்பரப்பில் வெங்காயம் பயிரிடப்பட்டதால் வெங்காய உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

அறுவடை ஆரம்பமானதைத் தொடர்ந்து வெங்காயத்தின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. வெங்காயப்பயிர் அறுவடை செய்வதற்குமுன்னர் ஒரு அந்தர் மூவாயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்தது. தற்போது அதன் விலை ஆயிரத்து 500 ரூபாவாகக் குறைந்துள்ளது. (த-173)

## ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்.1

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 171ஆவது ஜெயந்தி விழா நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு தாவடி இ.த.க. பாடசாலைக் கட்டடத்தில் இயங்கும் சேவாச்சிரமத்தில் பஜனை, பூஜை என்பனவும் -

எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தாவடி தெற்கு, காளியம்பாள் சனசமூக நிலையத்தில் இலவச கண்பரிசோதனையும் -

5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சேவாச்சிரம மண்டபத்தில் விழா நிகழ்வுகளும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள் வாசிக்கப்படவுள்ளதுடன், 'பார் முழுதும் போற்றும் பரமகம்சர்' என்ற தலைப்பில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம இணைச் செயலாளர் சீ.சிவமோகனின் சிறப்புரையும் இடம்பெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம உபதலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறும் ஜெயந்தி விழா நிகழ்விற்கு கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம பீடாதிபதி தவத்திரு ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-203)


# பாவனையாளர்களே ...!




❋ ஹினோடே போஸலானா எனப் பெயரிட்டு வெளிவந்த சிமெந்தானது தற்போது சுப்பர் போஸலானா சிமெந்தாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

❋ ஹினோடே போஸலானா கொண்டுள்ள SLS 1247 தரத்தினையே சுப்பர் போஸலானா சிமெந்தும் கொண்டுள்ளது.

❋ சுப்பர் போஸலானா சிமெந்தும் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ITI) தரச் சான்றிதழைப் பெற்றதாகும்.

## உறை புது ரகம் தரம் என்றும் நிரந்தரம்!

மிட்சுய் சிமெந்து உற்பத்தியின் ஹினோடே போஸலானா சிமெந்து இப்போது டோக்கியோ சுபர் உறையில்

**MITSUI CEMENT**

உற்பத்தியாளர்களிடமிருந்து

## பணி நிலை வேண்டுகை

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு நிர்வாகத்திற்கு பணி நிலைகளுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றன.

க.பொ.த. (சா/தரம்) கணிதம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* விண்ணப்பங்களை 10.03.2006 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைத்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்பக முகவரி:**
**மேலாளர்,**
**ஆளணிப்பகுதி,**
**நடுவப்பணியகம்,** (சி-48111) (18-45-12)
**போ.க.பிரிவு,கிளிநொச்சி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



மலர்வு 08 - 07 -1932 உதிர்வு 30 - 01 - 2006

**அமரர்**
**நாகமுத்து கிருஸ்ணபிள்ளை**

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நாகமுத்து கிருஸ்ணபிள்ளை அவர்களின் மறைவையொட்டி உதவிபுரிந்தோர், நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று(01.03.2006)புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*துவாரகை வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

**தகவல்:**
**பிள்ளைகள்.**
(47442)(18-45-12)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 26 - 04 - 1926



உதிர்வு 31 - 01 - 2006

**திருமதி**
**சின்னத்துரை தெய்வானைப்பிள்ளை**
***(விதானை மாமி)***

எங்கள் அன்புத் தெய்வமே!
காற்றாக எம் காலடியில்
வந்து சேர்ந்தாய்!
தனிமரமாக எம்முடன் சேர்ந்து சுழன்று
அமைதியாகச் சென்று விட்டாய்!
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.** (47440)(18-45-12)

**பிரிவால் வருந்தும்**
**குடும்பத்தினர்.**

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 - 02 -1950 உதிர்வு 24 - 02 - 2001

**இராசா மலர்**

திதி:01.03.2006

ஐந்து புதல்வர்களை ஈன்றெடுத்த எங்கள்
அன்னையே எமைப்பிரிந்த ஐந்தாம் ஆண்டினை
சிந்தையில் நினைத்து நாம் தீராப் பாசத்
தெய்வம் தன்னைத் தேடி நிற்கின்றோம்.

*நாவலடி,*
*உடுப்பிட்டி.*
(47439)(18-45-12)

**தகவல்: இராசா இஜேஸ்வரன்**
(சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்).

## மு.கா. வழக்கில் தீர்ப்பு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 1

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் வேட்புமனு தாக்கல் செய்து விதிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்த்து அக்கட்சி தாக்கல்செய்த எதிர் மனுமீதான தீர்ப்பு நேற்று மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சுமித்திர பால ஏற்கனவே விசாரணைகளிலிருந்து விலகிக் கொண்டார். இதனால், நேற்று முன்தினம் அளிக்கப்பட இருந்த தீர்ப்பு நேற்று அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மீண்டும் இன்றே தீர்ப்பு வழங்கப்படும் என நீதிமன்றில் நேற்று அறிவிக்கப்பட்டது.

(எ-க)

## மரண அறிவித்தல்

### கந்தையா கணபதிப்பிள்ளை
*(இளைப்பாறிய ஆசிரியர்)*



பெரியமாவடி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் தற்போது மடத்தடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் கந்தையா கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (28.02.2006)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியை செல்லம்மாவின் (யா/இ.ஆரம்ப பாடசாலை சாவகச்சேரி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலாயுதம் வள்ளிமுத்து, நாகலிங்[illegible] விசாலாட்சி- பரந்தன், பாலசிங்க[illegible]ல்வரத்தினம், கந்தசாமி மகேஸ்வரி, [illegible]சென்ற இளைப்பாறிய அதிபர் கார்த்திகேசு கந்தையா, கனகரத்தினம் ஆகியோரின் சகோதரரும் கணபதிப்பிள்ளை குகநாதன், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சோதிநாதன், இராசேந்திரன் சுந்தரேஸ்வரி,முத்துக்குமார் இரத்தினேஸ்வரி(ஆசிரியை - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும் நடராஜா இராசேந்திரன், கிருஸ்ணசாமி முத்துக்குமார்(குமார் ஏஜென்ட் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனும் கார்த்திகேசு பராசக்தி, இளைப்பாறிய ஆசிரியை செல்வநாயகி, மாலா (ஆசிரியை- முரசுமோட்டை ,முருகானந்தா மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் செல்லப்பா பாலசிங்கத்தின் மைத்துனரும் அர்ச்சயன், பிரவிந்தி, கோபிகன் (கனடா), யுகதர்சன், நிலுஜன், மேதா, கிசோக்,வைஷ்ணவி, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2006)புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மடத்தடி,*
*சாவகச்சேரி.*
*(47444)(18-12-45)*

**தகவல்:**
**க.குகநாதன் (மகன்),**
**ந.இராசேந்திரன்,**
**கி.முத்துக்குமார்**
**(மருமக்கள்).**


## உடன் விற்பனைக்கு

உல்லாசப் பிரயாணப் பேருந்து (Tourist Bus) 45 ஆசனங்களுடன் MITSUBISI FUSO ஜப்பான் பஸ் ஆங்கில இலக்கங்களுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு

*தொ.பே.இல. 0713056177*

**ராஜா** யாழ்ப்பாணம்

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா நடித்த

**கோவை பிரதர்ஸ்**

பு.நே. 10.30, 1.30,4.30 , 7.30

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேநேர வெளியீடு
அக்‌ஷன் கிங் அர்ஜுன் , கஜாலா , விவேக் நடித்த

**மதராஸி**

பு.நே.: 10.00, 1.00, 4.00


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரன் கனகேஸ்வரி



வண்ணார்பண்ணை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்லப்பா நடராசா-சரஸ்வதியின் மகளான நாகேஸ்வரன் கனகேஸ்வரி நேற்று (28.02.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரனின் அன்பு மனைவியும் விமல்ராஜின் அன்புத் தாயும் கவிவிஜயாவின் அன்பு மாமியும் ஜெகநாதன், காலஞ்சென்ற நமசிவாயம், லோகேஸ்வரி, கோபாலநாதன், தியாகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் பிரமிளா(ஆசிரியை), மஞ்சுளா(ஜேர்மனி), சிறிதரன் (ஹொலண்ட்), பரிமிளா(நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - கச்சேரி), விஜயதரன்(விஜயன் நகைத்தொழிலகம்) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.03.2006)புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காககோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம். (47441)(18-12-45)*

**தகவல்:**
**க.நாகேஸ்வரன்(கணவர்),**
**நா.விமல்ராஜன்(ராஜு-மகன்).**

### வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்



பருத்தித்துறை,ஓராம்கட்டையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் நேற்று(28.02.2006)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரன் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பவானியின் அன்புக் கணவரும் மயூரன் (கனடா), செந்தூரன் ஆகியோரின் தந்தையும் தர்மினியின்(கனடா) அன்பு மாமனும் காலஞ்சென்ற தர்மபால கிருஸ்ணன், பத்மநாதன், இரட்ணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயரட்ணம், சந்திரா,தங்கையா, கெங்காலட்சுமி, நேசராஜா, பராசக்தி, சிவநாதன், அதிரூபராணி(கனடா), கிருஸ்ணதாசன் -சற்சரூபி(கனடா), காலஞ்சென்ற சிவயோகநாதன் - சுகிர்தா, புவனேந்திரகுமார் - வசந்தி (சுவிஸ்), ரட்ணராஜா - சிவசரணதேவி (சுவிஸ்),செல்வரட்ணம் - றவிசாந்தி (பிரான்ஸ்), லோகேஸ், காலஞ்சென்ற நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் றெஜி, சுதா, சுஜீவன், காலஞ்சென்ற சுதர்சன், ஜெனா, கீர்த்திகா, சாந்தன், கண்ணா, கௌதமன், கௌதமி, றஜீவன், லக்ஸி, சாம்பவி, ராம், ரசிக்கா, ஐங்கரன், ஆர்த்தி, பிரகாஷ், கஸ்தூரி, வித்தியா, செல்வச்சந்திரன், பவாஆகியோரின் சிறிய தந்தையும்ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*331/1, மானிப்பாய் வீதி,*
*(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக )*
*யாழ்ப்பாணம்*
*தொ.பே.: 077 8436821*
*0779232975*
*(47443)(18-12-45)*

**தகவல்:**
**செந்தூரன் (மகன்).**

### திருமதி நவரட்டினம் சரஸ்வதி(பவளம்)



சரவணை மேற்கு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 432/2, மடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் நவரட்ணம் (ஜே.பி., தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை-கச்சேரி யாழ்ப்பாணம்) அவர்களின் மனைவி திருமதி நவரட்டினம் சரஸ்வதி அவர்கள் நேற்று (28.02.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோனி கனகசபை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருஸ்ணன் - கனகம்மா தம்பதியரின் மருமகளும் மதநீவனின் பெறாமகளும் கோபாலசிங்கம்,கோமதி,கேதாரம்(பிரான்ஸ்), இராமநாதன், பரிமளா, செல்வராசா, விஜிஜேந்திரன், சிறிகரன்(லண்டன்) ஆகியோரின் சகோதரியும் துரைசிங்கம், தர்மகுலசிங்கம், யோகலிங்கம், தேவபாலன், தனபாலன், குமரகுரு ஆகியோரின் மைத்துனியும் சந்திரா, ஜெயராணி, லதா, சுதா, கலா, திலகேஸ்வரி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.03.2006)புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*432/2, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம். (47445)(18-12-45)*

**தகவல்:**
**கே.விஜிஜேந்திரன்**
**(மகேந்திரம்-சகோதரன்).**

### திருமதி தில்லையம்பலம் கனகம்மா

வலந்தலை, நடுத்தெரு, காரைநகரைச் சேர்ந்த திருமதி தில்லையம்பலம் கனகம்மா அவர்கள் நேற்று(28.02.2006)செவ்வாய்க்கிழமை உடுவிலில் காலமானார்.

அன்னார் சபாபதிப்பிள்ளை - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர் (எழுதுவினைஞர்), இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கனகசுந்தரம் (சிமெந்துக்கூட்டுத்தாபனம், வீமன்காமம்), விமலாதேவியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.03.2006)புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லவ்லேன்,*
*உடுவில். (சி-48113)(18-12-45)*

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**க.தேவதாஸ் (பெறாமகன்).**

# கடற்றொழிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருதுறைகளும் மூடப்பட்டுள்ளன. இதனால் கடற்றொழிலாளர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. ஒருதுறையைத் திறக்க நடவடிக்கை எடுப்பதாக படைத்தளபதி தெரிவித்தார்.

* குடாநாட்டில் வீதி ஓரங்களில் கடமையில் இருக்கும் படையினரை மீள அழைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக உடனடியாக இது நடை முறைச்சாத்தியம் இல்லை என படை அதிகாரி பதில் அளித்தார்.

* யுத்த நிறுத்த உடன்படிக்கையின் சரத்துக்களுக்கு முரணாகப் பாதுகாப்பு முன்னரங்க நிலைகளில் இருந்து 600 மீற்றருக்கு முன்பாக எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தில் பயப்பீதியுடன் மக்கள் வாழும்நிலை உள்ளது. இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இந்த விடயம் தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது, ஆனபடியால் உடன் நடவடிக்கை எடுக்கமுடியாது. உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்துக் காலப்போக்கில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று படை அதிகாரி தெரிவித்தார்.

* சாவகச்சேரி - கச்சாய் வீதியில் படையினரால் வெட்டப்பட்ட வேலிகளை மீள அமைத்துத்தர வேண்டும் என்று கோரப்பட்டது. இது விடயமாக அப்பகுதி கிராம சேவையாளர், 521 படை அதிகாரியுடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் படையினர் உரிய நடவடிக்கை எடுப்பர் என படை அதிகாரி பதில் அளித்தார்.

* பொன்னாலைப் பகுதியில் கடற்படையினர் முட்கம்பி வேலிகளை அமைப்பது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது விடயமாக வலி.தெற்குப் பிரதேச செயலர் அரச அதிபருக்கு அனுப்பிய கடிதத்தை சமர்ப்பிக்கும்பட்சத்தில் துரித நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி கூறினார் படைத் தளபதி.

* தீவகத்துக்குச் செல்லும் பொதுமக்கள், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் சோதனைக் கெடுபிடியால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக்கூறப்பட்டது.

உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறிய படைத் தளபதி, ஆசிரியர்கள், அரச ஊழி யர்கள் பஸ்ஸில் இருந்து இறக்காது, அங்கு வைத்துச் சோதனை செய்ய ஏற்பாடு செய்வதாகக் கூறினார்.

* சுற்றுச்சூழலைப் பாதிக்கும் வகையில் பயன்தரு மரங்கள் தறிப்பது குறித்து ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களுக்கு தகுந்த பதில் கிடைக்கவில்லை.

* மாவிட்டபுரத்தில் இருந்து கீரிமலைக்குச் செல்லும் வீதியில் இரு மருங்கிலும் கற்கள் தோண்டப்படுவதால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படுவதுடன், நிலத்தடி நீர் உருவாகும் ஆபத்து இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

பலாலி விமான நிலைய ஓடுபாதையைத் திருத்தவும் அதனை விஸ்தரிப்பதற்குமாகவே கற்கள் தோண்டப்படுகின்றன. இது தவிர்க்க முடியாத விடயம் எனப் படை அதிகாரி தெரிவித்தார்.

அரச அதிபர் இந்த விடயத்தில் தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமைப்புப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

* வரணி இராணுவமுகாம் முன்பாக உள்ள வீதி பாதுகாப்புக் காரணங்களுக்காகத் திறக்கப்படமாட்டது என படைத் தளபதி தெரிவித்தார்.

* பாடசாலைகளுக்கு முன்பாக போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரிகள் பணியாற்றுவர் என படை அதிகாரி தெரிவித்தார். (3-13)

# ஜெனீவா உடன்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட உடன்பாட்டை நாம் நிராகரிக்கிறோம். 'மஹிந்த சிந்தனை'க்கு முரணான வகையில் இந்த ஒப்பந்தம் செய் யப்பட்டுள்ளது.

- இவ்வாறான ஒப்பந்தமொன்றை செய்வதற்காக - இவ்வாறான உடன்பாட்டைக் காண்பதற்காக - தேர்தலில் மக்கள், ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கவில்லையென்பதையும் இங்கு ஞாபகப்படுத்துகிறோம்.

ஜெனீவாப் பேச்சுகளால் புலிகளுக்கே நன்மை கிடைத்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி கிழக்கில் மீண்டும் தமது பலத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்குப் புலிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். யாழ்ப்பாணத்திலும் மீண்டும் அவர்கள் பலமாகக் கால் பதிப்பர். இதுதான் நடக்கப் போகின்றது.

துணைப்படைகளின் ஆயுதங்கள் எக்காரணத்திற்காகவும் களையப்படக் கூடாது. புலிகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்கவே துணைப்படைகள் ஆயுதங்களை வைத்துள்ளன. எனவே ஜெனீவா உடன்பாடு என்ற போர்வையில் இந்த விடயங்களை அரசு மேற்கொள்ளுமானால் நாம் எமது பிரதிபலிப்பை வெளிப்படுத்துவோம். அப்போது பெரும் விளைவுகளை அரசு எதிர்நோக்க வேண்டிவரும்.

- இவ்வாறு கூறினார் மேதானந்த தேரர்.

ஜெனீவா இணக்கப்பாடு குறித்துக் கூட்டறிக்கை வெளியான ஒரு சில தினங்களிலேயே தனது கண்டனத்தை தெரிவித்து ஓர் அறிக்கையை ஹெலஉறுமய விடுத்திருந்தது. அதன் பின்னர் விரைவிலேயே நேற்றைய செய்தியாளர் மாநாட்டைக் கூட்டி தனது சீற்றத்தை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறது அக்கட்சி.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கான மிகமுக்கிய பங்காளியாக ஹெலஉறுமய விளங்கியிருந்தது. அவரது வெற்றிக்கு உழைத்த மற்றொரு கட்சியான ஜே.வி.பியும் ஜெனீவா இணக்கப்பாட்டைக் கடுமையாக எதிர்த்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷ அளித்த வாக்குறுதிகளுக்கு மாறாக அவர் நடக்க முற்பட்டாரானால் மிகக்கடும் சவால்களுக்கு அவர் முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையே இவை காட்டுகின்றன என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-3)

# பாணந்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு பாணந்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த கைதிகள் தப்பி யோடியமைக்கு சிறைகாவலர்களின் உதவி வழங்கப்பட்டதா என்பதுகுறித்து தமக்கு சந்தேகமுள்ளது எனவும்பாணந்துறைப் பொலீஸார் தெரிவித்தனர். (க-3)

# மாணவிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் யாழ். பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு நேற்றுக் கிடைத்தன.

ஓரே சமயத்தில் பலர் பாதிக்கப்படக் காரணமாக அமைந்தது வைரஸ் காய்ச்சல் என்பது இந்த அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

# ஜெனீவாப் பேச்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.- இவ்வாறு கருணா குழுவிலிருந்து தப்பி வந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந் துள்ள இளைஞர் தெரிவித்துள்ளார்.

இவர் சரணடைந்தது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு ஒன்று கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்றபோது இந்த இளைஞர் விடயங்களை ஊடகவியலாளரிடம் தெரிவித்தார்.

சந்தவெளி, கோரகல்விமடுவைச் சேர்ந்த ஆறுமுகம் விக்னேஸ்வரன் (வயது-32) என்ற இந்த இளைஞர் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டு வந்தார் எனவும் கடந்த பத்து மாதங்களுக்கு முன்னர் வலுக்கட்டாயத்தின் பேரில் கருணா குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் எனவும் -கிரான் படைமுகாமில் படையினருடன் சேர்ந்து பொதுமக்களுக்கு கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு ஆளாகத் தன்னைப் பயன்படுத்தி வந்ததாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 18ஆம் திகதி கிரான் படை முகாமிலிருந்து விக்னேஸ்வரனைக் கருணா குழுவினர் தீவுச்சேனைக்கு வருமாறு அழைத்துள்ளனர். அங்கு சென்றபோது - 'நீர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்த வேண்டும்' எனக் கூறி அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு கலன், சிறிய அலவாங்கு ஒன்று, ஒரு எறிகணை மற்றும் வயர் ஆகியவற்றைக் கொடுத்தனர். அத்துடன் மூன்று நாள் சிறப்புப் பயிற்சியும் இவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் தாக்குதலை நடத்துவதற்கான ஊக்குவிப்புப் பணமாக நாலாயிரம் ரூபா பணம் கொடுத்ததாக அந்த இளைஞர் குறிப்பிட்டார்.

அதேவேளை, புலிபாய்ந்த பாலப் பகுதிக்குச் சென்று தளபதிகளான ஜெயார்த்தனன். உமாராம் ஆகியோர் மீது தாக்குதலை நடத்திவிட்டு வருமாறு தெரிவித்துள்ளனர். தாக்குதல் முடிந்தபின் கிரான் படைக்கு முகாமிற்கு வருமாறும், வரும்போது டோர்ச் லைட் பாவிப்பதன் மூலம் படையினர் அடையாளம் கண்டு கொள்வார்கள் எனக் கிரான் படைமுகாமிலுள்ள இராணுவ அதிகாரி கப்டன் பந்துல என்பவர் குறிப்பிட்டார் எனவும் இந்த இளைஞர் தெரிவித்தார்.

இந்த இளைஞரை ஓட்டமாவடிக்கு ஏற்றி வந்து அங்குள்ள இளைஞர்களிடம் ஆயுதக் குழுவினர் ஒப்படைத்துள்ளனர். அந்த இளைஞர்கள் காவத்தை முனையிலுள்ள ஊர்காவல் படை காவலரணுக்குக் கொண்டு வந்துவிட் டனர் எனவும் அங்கிருந்து ஆற்றைக் கடந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகு திக்கு வந்ததாகவும் இந்த இளைஞர் தெரிவித்தார்.

பின்னர் தாம் செய்யப்போவது தவறு என்பதை உணர்ந்து, கொண்டு வந்த வெடி பொருள்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தேன் என்றார். ஆயுதக்குழுவிடமிருந்து தப்பி வந்த விக்னேஸ்வரன். (க-3)

# காலி துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு தப்பிச் சென்றுவிட்டனர். தனிப்பட்ட பகைமை காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருப்பதாகப் பொலீஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது

ரத்கம பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்திவருகின்றனர். (க-3)

# அவிசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றியிருக்கின் றனர்.

இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டில் தங்கியிருந்த ஒருவர் சந்தே கத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடம் நடத்திய விசாரணைகளின்போது இவர் பாதாள உலகக் கோஷ்டியொன்றின் முக்கிய புள்ளியென அடையாளம் காணப்பட்டார் எனப் பொலீஸார் கூறினர். இந்த நபர் அடங்கிய குழுவினர் அவிசாவளை பகுதியில் பல கொலை, கொள்ளைகளை நடத்தியிருக்கின்றனர்.

-என்று பொலீஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். (க-3)

## மரண அறிவித்தல்

### நீக்கிலாப்பிள்ளை அந்தோனிமுத்து

**(முன்னாள் மறைக்கல்வி நடுநிலைய ஊழியர்)**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை அந்தோனிமுத்து கடந்த 26.02.2006 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆரோக்கியத்தின் (ராசாத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை அன்னம்மா, பஸ்ரியாம்பிள்ளை யோசேப்பின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை(02.03.2006)வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*நல்லாயன் வீதி,* சுவாம்பிள்ளை யோசவ் அன்ரனி

*சில்லாலை.* (47446)(18-45-49) பீற்றர் இம்மானுவேல் (செல்வம்).

A/L 2006 கருத்தரங்கு
பொருளியல் - S.வரதராஜன்
ஆரம்பம்: 27-03-2006
மார்ச் 27, 28,29 ,30 ஏப்பிரல் 3 ,4 ,5 ,6 ஆம் திகதிகளில் நடைபெறும்
பிரிவு I 7.30 - 12.30 பிரிவு II : 1.00 - 6.00
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்முறை எமது நிறுவனத்தில் கல்வி கற்காத மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்
12 கருத்தரங்குக் குறிப்புகள் வழங்கப்படும்
பின்வரும் நிறுவனங்களில் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் :
D.C.M பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மார்ச் 5 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளவும்

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna,
55, Arasady Road Jaffna.
T.P: 021 2225170, 0777846811
Dip. in AutoCAD
Dip. in Internet E-Mail
தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான
பிரிவு II ஆரம்பம்
05.03.2006

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
பிரிவுII ஆரம்பம் 05,06.03.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 4 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING 4 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING 5 Months
DIPLOMA IN WEB DESIGNING 4 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE 6 Months
DIPLOMA IN INTERNET E-MAIL 2 Months
Softview Computer College
Www.scclanka.com scclanka@hotmail.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

### இரசாயனவியல்

V.C.அன்பழகன் B.Sc.

## இரசாயனவியல் I

அகில வாயு மாறிலி R = 8.314 $JK^{-1}\ mol^{-1}$
அவகாதரோ மாறிலி $N_A$ = 6.022 x $10^{23}$ $mol^{-1}$

1) $MgCl_2$ இன் 0.06 M கரைசலின் 300$cm^3$ உம், $FeCl_3$ இன் 0.01 M கரைசலின் 400$cm^3$ உம், NaCl இன் 0.004 M கரைசலின் 200 $cm^3$ ஒன்றாகக் கலக்கப் படின் விளைவு கரைசலில் உள்ள $Mg^{2+}$ அயன் செறிவைக் கணிக்குக.
 1) 0.02 M  2) 0.03 M  3) 0.01 M
 4) 0.04 M  5) 0.005 M

2) $Mg(NO_3)_2$ ஐயும் $BaCl_2$ ஐயும் வேறுபடுத்தி அறியப் பயன்படுத்தக் கூடியது எது / எவை?
 A) $K_2Cr_2O_7$  B) $K_2CrO_4$ / $CH_3COOH$  C) $Pb(NO_3)_2$
 D) $Na_2SO_4$
 1) A மட்டும்.  2) A,B,C,D  3) B,C,D மட்டும்.
 4) B,C மட்டும்.  5) B மட்டும்.





3) பின்வருவனவற்றுள் $H_3PO_2$ உடன் தாக்கம் புரியும் சாத்தியக்கூறு குறைந்தது எது?
 1) $AgNO_3$  2) $HgCl_2$  3) $FeCl_3$
 4) $H^+$ / $KMnO_4$  5) சரியான விடை இல்லை.




4) $CaCl_2$ ஆனது Ag மின்வாய்கள் கொண்டு மின்பகுக்கப்படுகிறது.சரியானது எது?
 1) கதோட்டில் Ca இறக்கமடைகிறது
 2) அனோட்டில் Ag சேர்வை உருவாகக்கூடும்
 3) அனோட்டில் முதலில் $Cl^-$ உம் பின் $OH^-$ உம் இறக்கமடைகிறது.
 4) அனோட்டில் முதலில் $OH^-$ உம் பின் $Cl^-$ உம் இறக்கமடைகிறது.
 5) அனோட்டில் $H_2$ வாயு வெளிவரும்





5) பின்வருவனவற்றுள் எதனுடன் $H_2S$ தாக்கம் புரியும் சாத்தியம் மிகக் குறைவாகும்?
 1) $O_2$  2) $HBrO_3$  3) $Na_3AsO_4$
 4) HI  5) $Br_2$


6) $C_3H_7NO$ எனும் மூலக்கூற்றச் சூத்திரத்தையுடைய ஒரு சேதனச்சேர்வை A பிராடியின் சோதனைப் பொருளுடன் மஞ்சள் வீழ்படிவைத் தோற்றுவித்தது. எனில் A இற்குப் பொருத்தமான சமபகுதியங்கள் எத்தனை?
 1) 2  2) 3  3) 4
 4) 5  5) 6

7) பின்வருவனவற்றுள் எது $C_6H_5MgBr$ உடன் தாக்கமுறமாட்டாது?
 1) $CH_3COOH$  2) $CH_3COCH_3$  3) $CH_3OH$
 4) $CH_3-C\equiv C-H$  5) $CH_3-CH=CH_2$

8) அமிலத்திறன் ஒப்பீடுகளில் சரியானது ஏது?
 1) $H_2O > ROH > H-C\equiv C-H > CH_4$
 2)  > $H_2CO_3$ > ROH > HC a" CH
 3) $H_2CO_3$ >  > ROH > $CH_4$ > $C_2H_2$
 4) $CH_3COOH$ >  > $H_2CO_3$ > $H-C\equiv C-H$ > ROH
 5) $CH_3COOH > HCOOH > H_2CO_3$ >  > $CH_3OH$






9) மூலத்தன்மை பற்றிய ஒப்பீடுகளில் சரியானது எது?
 1) $CH_3CH_2NH_2 > CH_3CONH_2$ > 
 2) $CH_3CH_2NH_2$ >  > $CH_3CONH_2$
 3) $CH_3CONH_2$ >  > $CH_3CH_2NH_2$
 4)  > $CH_3CONH_2$ > $CH_3CH_2NH_2$
 5)  > $CH_3CH_2NH_2 > CH_3CONH_2$

1) 
2) 
3) 
4) 
5) சரியான விடை இல்லை.

11) எத்தொகுதி தாங்கற் கரைசல்களை மட்டும் கொண்டமைகிறது?
 1) $[(CH_3)_2NH_2]_3PO_4$ , $NaHC_2O_4$ , $NaHSO_4$
 2) $Cl_3CCOONH_4$ , $NaH_2PO_4$ , $NaHCO_3$
 3) $[(CH_3)_2NH_2]_3PO_4$ , $NaH_2PO_4$ 
 4) $F_3CCOONH_4$ , $NaHSO_4$ , $HCOONH_4$
 5)  , $Na_2HPO_4$ , $NaClO_4$

12) பின்வரும் வெப்பவுள்ளுறையை மாற்றங்களில் நேரடியாக பெறுமானம் துணிய முடியாதது எது?
 1) ஐதரோகாபன்களின் நியம ஆக்க வெப்பவுள்ளுறை.
 2) அயன் சேர்வைகளின் நியம சாலகசக்தி.
 3) $CuSO_4$ இன் நீரேற்றசக்தி.
 4) மென்னமிலங்களின் கூட்டப்பிரிகை சக்தி.
 5) மேலுள்ள யாவற்றினதும் பெறுமானங்களை நேரடியாக துணிய முடியாது.

13) $CuSO_4$ கரைசலுக்கு மிகை NaCl திண்மம் இட உண்டாகும் கரைசலின் நிறத்துக்கு திட்டவாக நிறத்தை தரக்கூடிய கரைசலை பின்வரும் எச்செயல் கொடுக்கும்.
 1) $NiCl_2$ கரைசலுக்க மிகை அமோனியா சேர்த்தல்.
 2) $FeCl_3$ கரைசலுக்க மிகை $NH_4SCN$ சேர்த்தல்.
 3) $CuSO_4$ கரைசலுக்க மிகை அமோனியா சேர்த்தல்.
 4) $K_2Cr_2O_7$ கரைசலுக்க மிகை NaOH சேர்த்தல்
 5) செறி $CoCl_2$ கரைசலுக்க மிகை செறி HCl சேர்த்தல்

14) சேர்வை A யானது ஈரசோவாக்கத்திற்கு உட்படுவதில்லை. ஆனால் A யினை $NaOH_{(aq)}$ உடன் வெப்பமேற்ற பெறப்படும் விளைவு B ஈரசோவாக்கல் தாக்கத்திற் குட்படும். எனினும் உறுதியான உப்ப பெறப்படுவதில்லை. Bயினை வன்பிநந் தனைகளில் ஒட்சியேற்ற பெறப்படும் விளைபொருள் C வெப்பமாக்க இலகுவில் நீரை இழக்கும். சேர்வை A யாக அமையக்கூடியது
 1) 
 2) 
 3) 
 4) 
 5) 

15) P எனும் சேர்வை con $HNO_3$ உடன் வெப்பமேற்ற கபிலநிற வாயு (Q) ஐயும் கரைசல் R ஐயும் கொடுத்தது. R ஆனது KOH சேர் $K_2CrO_4$ உடன் மஞ்சள்நிற வீழ்படிவைக் கொடுத்தது. இவ்வீழ்படிவு அசற்றிக்கமிலத்தில் கரையவில்லை. சேர்வை P யானது $NaOH_{(aq)}$ Al உடன் வெப்பமேற்ற மூக்கை அரிக்கும் மண முடைய வாயு வெளியேறியது. சேர்வை P ஆனது
 1) $Sr(NO_3)_2$  2) $Ba(NO_3)_2$  3) $PbBr_2$
 4) $SrBr_2$  5) $BaBr_2$

16) நீர் சோடியமைதரொட்சைட் மாதிரியை நீண்ட நாட்களுக்கு வளியில் விடும் போது விளைவில் இருக்கக் கூடியது?
 1) சோடியமைதரொட்சைட்  2) சோடியங்காபனேற்
 3) சோடியம் ஐதரசன்காபனேற்  4) விடை 1 , 2 சரியானவை.
 5) விடை 1 , 2 , 3 சரியானவை.

17) நீர்க்கரைசலில் எவ்விரு பதார்த்தங்கள் தாக்கம் புரியாமல் ஒருங்கே அமையக் கூடியதாக இருக்கும்.
 1) $Na_2CO_3$ உம் NaOH உம்  2) $K_2Cr_2O_7$ உம் NaOH உம்
 3) $NaHSO_4$ உம் $NaHCO_3$ உம்  4) $NaHSO_4$ உம். NaOH உம்
 5) NaOH உம் $NaHCO_3$ உம்

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி 08.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)

## விடைக் குறிப்புகள்

# இணைந்த கணிதம் I


வெளியீடு 01

(b) $|Z - (5\sqrt{2} + 5\sqrt{2}i)| = 6$

இது $(5\sqrt{2} + 5\sqrt{2}i)$ இனை மையமாகவும் 6 இனை ஆரையாகவும் உடைய வட்டமாகும். [05]

$\arg(5\sqrt{2} + 5\sqrt{2}i) = \tan^{-1}\dfrac{5\sqrt{2}}{5\sqrt{2}} = \dfrac{\pi}{4}$ [05]

$|5\sqrt{2} + 5\sqrt{2}\,i| = 10$ [05]




[10]

$OC = 10,\ cp_1 = 6$

$\tan\theta = \dfrac{6}{8} = \dfrac{3}{4}$

$\theta = \tan^{-1}(3/4)$ [05]

$\{\arg(z)\}$ உயர்வு $= \arg(z_1) = \pi/4 + \theta = \pi/4 + \tan^{-1}(3/4)$ [05]

$\{\arg(z)\}$ இழிவு $= \arg(z_2) = \pi/4 + \theta = \pi/4 + \tan^{-1}(3/4)$ [05]

$(z_1) = |z_2| = \sqrt{10^2 - 6^2} = 8$ [05]

$|z|$ உயர்வு $|z_3| = oc + 6 = 16$ [05]

$|z|$ இழிவு $|z_4| = oc - 6 = 4$ [05]

$\arg(z_3) = \arg(z_4) = \pi/4$ [05]

**[60]**

---

**[5]** (a) $y = \sqrt{5x^2 + 4} \Rightarrow (y)\, x = 1 = 3$ [05]

$\dfrac{dy}{dx} = \frac{1}{2}(5x^2 + 4)^{-1/2}\, 10x = \dfrac{5x}{y}$

$y\dfrac{dy}{dx} = 5x$ ① [05]

$\left(\dfrac{dy}{dx}\right)_{x-1} = \dfrac{5}{3}$ [05]

① இனை x குறித்து வகையிட

$y\dfrac{d^2y}{dx^2} + \left(\dfrac{dy^2}{dx}\right) = $ ———— ② [05]

$3\left(\dfrac{d^2y}{dx^2}\right)_{x-1} + \dfrac{25}{9} = 5$

$3\left(\dfrac{d^2y}{dx^2}\right)_{x-1} = \dfrac{20}{9}$

$\left(\dfrac{d^2y}{dx^2}\right)_{x-1} = \dfrac{20}{27}$ [10]

② இனை x குறித்து வகையிட

$y\dfrac{d^3y}{dx^3} + \dfrac{d^2y}{dx^2}\cdot\dfrac{dy}{dx} + 2\dfrac{dy}{dx}\cdot\dfrac{d^2y}{dx^2} = 0$

$3\left(\dfrac{d^3y}{dx^3}\right)_{x-1} + \dfrac{20}{9}\cdot\dfrac{5}{3} + 2\cdot\dfrac{5}{3}\cdot\dfrac{20}{27} = 0$

$3\left(\dfrac{d^3y}{dx^3}\right)_{x-1} = -3 \times \dfrac{20}{7} \times \dfrac{5}{3}$

$\left(\dfrac{d^3y}{dx^3}\right)_{x-1} = -\dfrac{100}{81}$ [10]

(b) குளத்தின் அகலம் x என்க

∴ குளத்தின் நீளம் 2x

வான் பாயும் உரயம் y என்க.

உட்பரப்பு $= x.\,y \times 2 + 2x.\,y \times 2 + x.\,2x = 15{,}000$ [10]

$6xy + 2x^2 = 15{,}000$

$3xy = 7500 - x^2$

$y = \dfrac{2500}{x} - \dfrac{x}{3}$ ——— ① [05]

மொத்தக் கன அளவு வான்பாயும் நிலைவரை V என்க.

$V = x.\,2x.\,y$ [05]

$V = 2x^2\left(\dfrac{2500}{x}\right) - \dfrac{x}{3}$

$V = 5000x - \dfrac{2x^3}{3}$

$\dfrac{dv}{dx} = 5000 - x^2$ [10]

$\dfrac{dv}{dx} = 0$ இல் உயர்வு, இழிவு பெறப்படும். [05]

$\Rightarrow 5000 - 2x^2 = 0$

$x^2 = 2500$

$x = \pm 50$

$x > \Rightarrow x = 50$ [05]

$x = 50 + \delta \Rightarrow dv/dv < 0$

$x = 50 - \delta \Rightarrow dv/dx < 0$

$\Rightarrow x = 50$ இல் உயர்வு பெறப்படும் [05]

$\Rightarrow y = {}^{2500}/_{50} - {}^{50}/_{3} = {}^{100}/_{3}$ m [05]

∴ வான் பாயும் உயரம் ${}^{100}/_{3}$ ஆகும்.

**[6]** (a) $xe^x = u$ என்க. [05]

$(xe^x + e^x)\,dx = du$ [05]

$\displaystyle\int\frac{e^x(1+x)}{\sin^2(xe^x)}\,dx$

$= \displaystyle\int\frac{du}{\sin^2 u}$

$= \displaystyle\int \operatorname{Cosec}^2 u\,du$ [05]

$= -\operatorname{Cot} u + c$ [05]

$= -\cot(xe^x) + c$ ; c - மாறிலி

(b) $I = \operatorname{Sin}^{-1} x\,dx$

$I = [x\operatorname{Sin}^{-1}x]_0^k - \displaystyle\int_0^k x\cdot\frac{1}{\sqrt{1-x^2}}\,dx$ [05]

$I = k\operatorname{Sin}^{-1}k + \frac{1}{2}\left[2\sqrt{1-x^2}\right]_0^k$ [05]

$I = k\operatorname{Sin}^{-1}k + \sqrt{1k^2} - 1$ —— ①

$\displaystyle\int_0^k J = \sqrt{1-x^2}\,dx$

$x = \operatorname{Sin}\theta$ என்க, $dx = \operatorname{Cos}\theta\,d\theta$ [05]

$x = 0 \Rightarrow \theta = 0$, $x = k \Rightarrow \theta = \operatorname{Sin}^{-1}(k)$ [05]

$J = \displaystyle\int_0^{\operatorname{Sin}^{-1}(k)} \sqrt{1 - \operatorname{Sin}^2\theta}\,.\operatorname{Cos}\theta\,d\theta$ [05]

$= \operatorname{Cos}\theta\,.\operatorname{Cos}\theta\,d\theta$

$= \frac{1}{2}\displaystyle\int_0^{\operatorname{Sin}^{-1}(k)} (1 + \operatorname{Cos}2\theta)\,d\theta$ [05]

$2J = \left[\theta + \dfrac{\operatorname{Sin}2\theta}{2}\right]_0^{\operatorname{Sin}^{-1}k}$ [05]

$2J = \operatorname{Sin}^{-1}(k) + \left(\dfrac{2\operatorname{Sin}\theta\operatorname{Cos}\theta}{2}\right)^{\operatorname{Sin}^{-1}k}$

$2J = \operatorname{Sin}^{-1}(k) + k.\sqrt{1-k^2}$ —— ② [05]

① + ② $\Rightarrow I + 2J = (k+1)\{\operatorname{Sin}$

**(இந்த விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 08.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)**